www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் 96 ஐப்பசி கார்த்திகை 2000 அன்பளிப்பு 5/-



- தலைவர் பிரபாகரன் - சொல்கெயிம் சந்திப்பு
- திறந்தவெளிச் சிறைச்சாலை - மனச்சாட்சியின்குரல்
- ஆயிரம் கதைஅளந்து ஆட்சியேறிய அபூர்வ சிந்தாமணி
- நீரில் கரைந்த நெருப்பு
- பேரினவாதிகள் கைகோர்க்கின்றனர்
- நயவஞ்சக அரசியல்
- ஆனைக்கு முந்திய மணியோசை


# தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

**மாவீரர் நாளை முன்னிட்டு தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை இங்கே முழுமையாகத் தரப்பட்டுள்ளது.**



## தலைவரின் மாவீரர்நாள் உரை - 2000

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

எமது மண்ணிற்காக, எமது மக்களுக்காக, விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக, தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள். இந் நன்நாளில், எமது ஆன்மக் கதவுகளை அப்புனிதர்களுக்காகத் திறந்து கொள்வோம்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர்வாழும் இம் மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமைகொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும் பொழுது, அந்த எரியும் சுடரில், அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.

அக்கினியாகப் பிரகாசித்தபடி, ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல, ஒளி காட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசய காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்.

மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை. அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகச்சுடரேற்றி அவர்களை நினைவு கொள்ளும் இந்தப் புனித நாளில் நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக, அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக, எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங்களையும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் செய்து கொள்வோம்.

எனது அன்பான மக்களே,

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாம் ஒரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி, எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி, குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும். தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக இருபதினாயிரம் இராணுவத்தினருடன், தொடர்வலய முகாம்களால் சூழப்பட்டு, பரந்தனிலிருந்து பளைவரையும், கரையோரத்தளங்களோடும், 80 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட ஆனையிறவுப் பெருந்தளம் எம்மால் வெற்றிகொள்ளப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்ட மகத்தான இராணுவ சாதனையாகும். இப் புகழீட்டிய வரலாற்றுச் சமரில் புலிகள் வரித்த நுட்பமான போர் வியூகங்களும், திகைப்பூட்டும் தரை இறக்கங்களும், வீரம் செறிந்த தாக்குதல்களும், தந்திரோபாயங்களும் போரியற் கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது. வெளிநாட்டில் பயிற்சிபெற்று. உள்நாட்டில் களமாடி முதிர்ச்சி பெற்ற சிங்களத்தின் சிறப்புப் படையணிகள் இச்சமரில் சிதைக்கப்பட்டன. இந்நிகழ்வானது சிங்களத்திற்கு இராணுவ, பொருளாதார ரீதியில் முண்டுகொடுத்து நிற்கும் உலக வல்லரசுகளை திகைப்பில் ஆழ்த்தியது.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொண்டு தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதேவேகத்தோடு, கிழக்கு அரியாலை வழியாக எமது படையணி ஒன்று யாழ்ப்பாணத்தின் நகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது. அதேசமயம் எமது மற்றைய படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி, மட்டுவில் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தன. யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து, ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக விளங்கிய பலாலிப் பெருந்தளம் எமது பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத்திடீர் திருப்பங்களின் விளைவாக சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியைச் சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலைகுலைந்து போனார். ஆயினும் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி, சர்வதேச உலகத்தின் உதவி பெற்று நெருக்கடியைச் சமாளிக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள முப்பதினாயிரம் சிங்களப் படையினருக்கு உயிராபத்து ஏற்படுமென உலகெங்கும் அபாயச்சங்கை ஊதினார். இந்த அபாய அறி

( 15ஆம் பக்கம் பார்க்க )

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# தீர்வுக்கான மார்க்கம்

இலங்கைத்தீவில் நடைபெறும் இனப்போர், இன்று உலகமயப்பட்டு சர்வதேச அரசியலாகிவிட்டது.

வடபுலப் போர்அரங்கில் சிங்களப்படைகளுக்கு எதிராக புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட இராணுவ மேன்நிலையின் மத்தியிலும் சிங்கள அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுக்களை நடாத்த தலைவர் பிரபாகரன் கடந்த வருடம் விடுத்த அழைப்பும்-

அப்பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானதாக அமையவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் வெளிநாட்டு மத்தியத்துவத்தைக் கோரிய அவரின் அரசியல் நிலைப்பாடும் உலக சமூகத்தின் ஆதரவைப் பெற்றுள்ளன.

அமைதிப் பேச்சுக்களில் நம்பிக்கையற்றவர்கள் - அரசியல் தீர்வில் நாட்டமற்றவர்கள் என்றவாறாக புலிகள் இயக்கம்மீது சிங்கள அரசு தொடர்ச்சியாகச் சுமத்திவந்த அபாண்டமான குற்றச்சாட்டுக்கள், சர்வதேச அளவில, இன்று வீரியமிழந்துவிட்டன.

உலக சமூகத்தின் இக்கருத்துமாற்றம் புலிகள் இயக்கத்திற்குக் கிடைத்த அரசியல் வெற்றியாகக் கணிக்கப்படுகின்றது.

நோர்வே அரசாங்கம் எடுத்த பேச்சுவார்த்தைக்கான முன்முயற்சிகள் சிங்கள அரசாங்கத்தால் அசண்டைசெய்யப்பட்டது உலகநாடுகளுக்கு ஒரு உண்மையை உணர்த்திவிட்டது.

அரசியல் பேச்சுக்களில் ஆர்வமற்றிருப்பது புலிகள இயக்கமல்ல, சிங்கள அரசுதான் என்ற பேருண்மை இப்போது அம்பலமாகியுள்ளது.

எனவேதான் புலிகளுடன்பேசி போரை முடிவுக்குக்கொண்டுவந்து - இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணமுயலுமாறு சிங்கள அரசாங்கத்திற்கு சர்வதேச அரசுகள் ஆலோசனைகளையும்- அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றன.

ஆயினும், பேரினவாதக் கருத்து நிலையை தனது அரசியல் சித்தாந்தமாக வரித்துக்கொண்ட சிங்கள அரசு சர்வதேச அபிப்பிராயத்திற்கு செவிசாய்க்க மறுத்து வருகின்றது. பதிலாக, போரை விரிவாக்குவதிலேயே பணத்தையும்- காலத்தையும் செலவிடுகின்றது. இப்போது போரை நடாத்த எதிர்க்கட்சியினதும் ஆதரவைப் பெற்றுள்ளது. ஆயுதப்பெருக்கத்தைச் செய்து - பெருமெடுப்பில் படைக்கு ஆட்திரட்டி தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண்பதிலேயே விடாப்பிடியாகவுள்ளது.

இதேவேளை, அரசியல் தீர்வுத்திட்டம் - அதை அமுல்படுத்துவதற்காக அரசியல் அமைப்புச்சட்டத்தில் மாற்றம்... என்று வழமைபோலவே உலகை ஏமாற்றும் எண்ணத்துடன் அரசியல் சித்துவிளையாட்டுக்களிலும் சிங்கள அரசு ஈடுபட முயல்கின்றது.

இத்தகைய அதிரடி அறிவிப்புகளால் சர்வதேச நாடுகள் சில குழப்பமடைந்தாலும், தமிழ் மக்கள் தரப்பில் அத்தகைய குழப்பங்கள், இப்போது ஏற்படுவதில்லை.

வன்னிமண்ணில் வெற்றிகரமாக உருவாகி வரும் எல்லைப்படை - கிராமியப்படை மற்றும் போர்எழுச்சிக்குழுக்கள் என்றவாறான மக்கள் படைக்கான இராணுவக் கட்டுமானத்தில் பொது மக்கள் காட்டிவரும் தீவிரபங்களிப்புகள் எமது மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குச் சான்றுகளாக உள்ளன.

இதேபோல, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் நிலங்களில் இடம்பெறும் இராணுவ அத்துமீறல்களுக்கு எதிராக அப்பகுதிவாழ் மக்கள் உடனுக்குடன் கண்டனப் போராட்டங்களை நடாத்தி சிங்கள அரசின் இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பும் தெரிவித்து - தமது தேசிய எழுச்சியை வெளிப்படுத்திவருகின்றனர்.

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பு முழுவதும் உத்வேகத்துடன் நடைபெற்று வரும் போர் எழுச்சி மாநாடுகளில் மக்கள் காட்டிவரும் செயலார்வம் இந்தத் தேசிய எழுச்சியின் வரலாற்று வளர்ச்சியைச் சுட்டிக்காட்டும் மைல்கல்லாக அமையப்போகின்றது.

பொ. ஐ. முன்னணியோ அல்லது ஐ. தே. கட்சியோ - சிங்களத்தின் ஆளும்கட்சிகள் இரண்டும் - முன்வைக்கும் இனப்பிரச்சனைக்கான தீர்வு போர்தான். போரை விரிவாக்கியபடி -பொ. ஐ. முன்னணி அரசியல் நடாத்துகின்றது. தாம் பதவியேற்றால் போர்ச்சபை ஒன்றை உருவாக்கி இராணுவப் புலமை உள்ளோரை ஒருங்குதிரட்டி போரைநடாத்தி -வெற்றிபெறப்போவதாக ஐ.தே. கட்சி பிரகடனம் செய்திருந்தது. இப்போது இரண்டு பிரதான கட்சிகளும் கைகோர்த்தபடி தமிழருக்கெதிரான போரை நடாத்தவே முயற்சிகள் நடக்கின்றன. சிங்களதேசத்தின் பத்திரிகைகளும் போர்மூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. புற்றீசல்போல் -கிளம்பியுள்ள பேரினவாத அமைப்புக்களும் ஒட்டுமொத்தப்போரையே வற்புறுத்துகின்றன.

இந்தப்போருக்கு முகம்கொடுத்து - யுத்தத்தில் வெற்றிபெறுவதைத்தவிர தமிழினத்திற்கு மாற்றுவழிகள் ஏதுமில்லை. குடாநாட்டில் அரசபடைகள் புதிதாகத் தொடக்கியுள்ள சமர்களில் தமிழர்சேனையான புலிப்படை திறம்படச் செயலாற்றியபடி - யுத்தத்தில் வெற்றிகளையே கண்டுவருகின்றது. சிங்களப்படையுடனான போரில் தமிழினம் முழுவெற்றியைக் காணும் நிலை வெகுதூரத்திலில்லை. இந்த வெற்றியை விரைவாக்குவதற்காக தமிழ்மக்கள் அனைவரும் போர்ப்பயிற்சி பெற்று - களம்புகவேண்டிய தருணம் இதுவாகும்.

O

# சூடெரிந்த வயல் துளிர்க்கின்றது

கிளிநொச்சி நகர், அது புதைகுழியாய் சபிக்கப்பட்ட பூமியில் லைத்தான். ஆனால் ஆக்கிரமிக்கப்பட்ட எங்கள் எல்லா நிலங்களையுயபோல் இன்று நாங்கள் அந்த பூமியில் எலும்புக்கூடுகளைத் தாண்டிக்கொண்டிருக்கின்றோம். ஆனாலும் ஆனையிறவின் வீழ்ச்சி அந்த நகரில் தொடர்ந்த துயரங்களுக்கு முடிவெழுதிவிட்டது அந்த அத்தியாயம் ஆனையிறவில் ஏறிய கொடியோடு முடிந்துபோயிற்று.

இது அந்த நகரிற்கு 'இலைதுளிர் காலம போலும். சருகுதிர்ந்து, மொட்டையாகிநிற்கும் மரங்கள் முளைவெடித்து இலைதுளிர்க்குமே அதுபோல, பெரும்பாலும் நாயுருவிப் பற்றைகளும் காட்டு மரங்களும் வளர்ந்து யாருமற்ற நிசப்தத்தில் மனித சஞ்சாரமற்ற பூமியாய் தனித்திருந்த கிளிநொச்சி நகர் மீண்டும் தன் மக்களின் வருகையால் துளிர்விடத் தொடங்கியது.

பச்சை பூசத்தொடங்கிவிட்ட வயல்களின் குறுக்கே வாய்க்காலிற்குப் போட்டிபோட்டவாறு ஓடிக்கொண்டிருந்தது அந்த மண் பாதை. ஆங்காங்கே வீதியில் சில கிலோமீற்றர்களுக்கு ஒருமுறை ஆக்கிரமிப்பின் வடுக்களாக அவர்கள் ஏற்படுத்திவிட்டுச் சென்ற மண்தடை அணைகளும், பதுங்கு குழிகளும் நினைவுகளைக் குத்தின.

''ஐயாவிற்கு என்ன பெயர்''

பாதையோரத்து காணி ஒன்றில் அவர்கள் குடும்பமிருந்தது. நான் சுற்றிவரப் பார்க்கத் தொடங்கினேன் அந்த குடிசை புதிதாகத்தான் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது அவர்களின் நிரந்தர வீடாகத் தெரியவில்லை. தடுப்புகள் ஏதுமற்ற கொட்டிலின் உள்ளே ஒரு மூலையில் மூடிய ஒரு பானையில் ஏதோ கொதித்துக் கொண்டிருந்தது. மண்வெட்டியும் கையுமாக நின்ற அந்த முதியவர் என்பக்கம் திரும்பினார். புன்னகையுடன் சொன்னார்.

''சுப்பையா தம்பி'' அந்த குடும்பத்தின் வறுமை அவரது முகத்தில் தெரிந்தது

**- அன்பு**

''ஐயா வீடு கட்டுறியளோ?'' எனது கேள்வி அசட்டுத்தனமானதோ? என நான் எண்ணிக் கொண்டேன். ஆனால் அவர் தீவிரமாய் பதில்சொல்ல ஆரம்பித்தார்.

''ஏன்தம்பி...? இப்ப இதே இடத்தில் மூண்டாந்தரம் கட்டுறன்.''

அவர் காட்டிச்சொன்ன இடம் மண்மேடாய் கிடந்தது. அவரைச் சுற்றி புதிதாய் அரிந்த கற்கள் கிடந்தன. என்னை நிமிர்ந்து பார்த்தவாறு தொடர்ந்து சொல்லத் தொடங்கினார்.

''எண்பத்தைந்து எண்டு நினைக்கிறன்.

ஆமிக்காரன் ஆனையிறவிலயிருந்து வெளிக்கிட்டு அடிக்கடி ஊருக்க வரத் தொடங்கின காலம்.

ஒருநாள் நாங்கள் பெரியாக்களெல்லாம் வயலில வேலைக்குப் போட்டம்.

வீட்டில பிள்ளையள் தான் நிண்டது.

எங்கட ஊருக்க வந்த ஆமிக்காறன் வீடுகள கொழுத்தத் தொடங்கிட்டான்.

என்ர வீடும் தப்பேல்ல.

நாங்கள் வந்து பாக்கேக்க ஆமியக்கண்ட பயத்தில அழுதுகொண்டிருந்த பிள்ளையள மட்டுந்தான் பார்க்க முடிஞ்சுது. எங்கட வீட்டோட எல்லாத்தையும் எரிச்சுப் போட்டான்.

வீட்டுக்க கிடந்த நெல்லுமூட்டையள், மாத்திக்கட்டிற உடுப்புக்களுந்தான்'' அவர் தொடர்ந்தும் சொல்லிக்கொண்டிருந்தார்.

''அப்ப எண்பத்தைஞ்சு எண்பத்தாறில இடக்கிட வந்தவங்கள் பேந்து தொண்ணூற்றியாறில ஒரேயடியா எங்கள குடியெழுப்பிப் போட்டாங்கள்.''

''பேந்து எங்கை ஐயா இருந்தனியள்?'' நான் கேட்டேன்.

''எல்லா இடமும் அலஞ்சம் தம்பி. எப்படியோ இருந்தம். இப்படியொரு நாள்வரும் எண்ட நம்பிக்கேலதான்.

இப்ப, அடிக்கடி வந்து எங்கட வீடுகளை கொழுத்தின, வயலில எங்கட சூடுகளை எரிச்ச நாசமறுவார் ஒருத்தரும் இல்ல. அவையள் இருந்த ஆனையிறவும் இல்ல.''

அவரது உடல் நடுங்கியது. குரல் தளம்பியது, சின்னமகள் தந்த தேனீரைப் பருகியபோது அவரது விழிகளில் தோன்றிய நீரில் அந்த நினைவுகள் தந்த வடுக்களின் வேதனை தெரிந்தது நான் அவரிடமிருந்து விடைபெற்ற போது மீண்டும் அவர் கற்களை அரியத் தொடங்கியிருந்தார்.

☼ ☼ ☼

''இப்ப நீங்கள் எங்க இருக்கிறியள்'' செல்வராணி ரீச்சரிடம் நான் கேட்டேன்.

''ஸ்கந்தபுரத்தில அப்பன்''

அவரது பதில் மென்மையாக வந்தது. இராணுவ ஆக்கிரமிப்பில்

( 11ஆம் பக்கம் பார்க்க )



www.eelamview.com

www.eelamview.com



# தலைவர் பிரபாகரன் - சொல்கெயிம் சந்திப்பு



தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வே அரசின் சிறப்புத்தூதர் எரிக் சொல்கெயிம் அவர்களை 01-11-2000 அன்று வன்னியில் சந்தித்து கலந்துரையாடிய நிகழ்ச்சி சர்வதேசமட்டத்தில் பலத்த வரவேற்பையும் - சிங்கள தேசத்தில் மிகுந்த சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இனிவருங்காலங்களில் சிங்கள அரசுடன் நடாத்தப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்று, சிலவருடங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கம் அரசியல் தீர்மானமெடுத்து- உலகிற்கு அறிவித்திருந்தது.

சர்வதேச நாடுகளை தவறாக வழிநடத்தவும்- புலிகள் இயக்கத்திற்கு களங்கத்தை உண்டுபண்ணும் முயற்சியாகவுமே அமைதிப்பேச்சுக்களை சிங்கள அரசு பயன்படுத்திவந்தது.

சிங்கள அரசின் இந்த நாசகாரமுயற்சியை முறியடிப்பதுடன் - சிங்கள அரசுடனான அமைதிப்பேச்சுக்கள் நேர்மையுடன் நடாத்தப்பட்டு ஆக்கபூர்வமான முடிவுகளை எட்டவேண்டும் என்ற நல்நோக்குடனேயே மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை புலிகள் இயக்கம் கோரியிருந்தது.

புலிகளின் இந்த அரசியல் தீர்மானத்தை சர்வதேச உலகம் வரவேற்று - பாராட்டியது. ஆரம்பத்தில் இதற்கு மறுப்புத்தெரிவித்துவந்த சிங்கள அரசு இறுதியில், சர்வதேச அழுத்தத்திற்கு அடிபணிந்து புலிகளின் மூன்றாந்தரப்பு மத்தியத்துவ யோசனைக்கு உடன்படவேண்டியதாயிற்று.

புலிகள் இயக்கத்திற்கும் - சிங்கள அரசுக்குமிடையே மத்தியத்துவராகச் செயற்பட பல மேற்குநாடுகள் விருப்பம் தெரிவித்தன. அதில் நோர்வே அரசு முன்னுரிமை பெற்றது. நோர்வேயின் மத்தியத்துவத்தை ஏற்றுக்கொள்ள புலிகள் இயக்கம் முன்வந்தது. சிங்கள அரசும் சம்மதம் தெரிவித்தது.

முதற்கட்ட சமாதானமுயற்சியாக வெளிநாடுகளில் இயங்கும் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகளையும் - சிங்கள அரசாங்கத்தின் அமைச்சர்களையும் மற்றும் சிங்கள அரசியல்கட்சித் தலைவர்களையும் சந்தித்துக் கருத்தறிந்த நோர்வே அரசின் சமாதானக்குழு, இப்போது, தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடி சமாதானமுயற்சிகளில் ஒருபுதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது.

சமாதானப் பேச்சுக்கள்மூலம் தமிழரின் தேசியஇனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வு காண புலிகள்இயக்கம் எப்போதும் தயாராகவே இருந்துவருகின்றது.

1985இல் நடைபெற்ற 'திம்பு' பேச்சுவார்த்தையிலிருந்து 1994இல் தொடங்கிய யாழ்ப்பாண பேச்சுவார்த்தைவரை சுமார் பத்து வருடகாலத்தில் சிங்கள அரசுடன் பல பேச்சுவார்த்தைகளை புலிகள் இயக்கம் நடத்திவிட்டது. எனினும், அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

சிங்கள அரசைப் பொறுத்தவகையில் தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலை எழுச்சியை அரசியல்ரீதியாக நசுக்கமுயலும் ஒரு தந்திரோபாய செயற்பாடாகவே பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்திவந்தது.

இதனால் பேச்சு தோல்விக்கான முழுப்பொறுப்பும் சிங்கள அரசையே சாரும்.

உண்மைநிலை இவ்வாறிருக்க ஒவ்வொருமுறையும் பேச்சுக்களை முறித்துவிட்டு அல்லது முறிவடையும் சூழலை திட்டமிட்டு ஏற்படுத்திவிட்டு பழியை புலிகள் இயக்கம்மீது சுமத்திவிடுவதிலேயே சிங்கள அரசு குறியாக இருந்துவந்துள்ளது.

'அமைதிமுயற்சிகளில் புலிகளுக்கு நம்பிக்கையில்லை' என்றும் 'அரசியல்தீர்வில் புலிகளுக்கு ஆர்வமில்லை' என்றும் சாட்டுக்கள் கூறி தமிழ்மக்கள் மீதான போரை விரிவாக்குவதிலேயே சிங்கள அரசு கண்ணும்கருத்துமாக இருந்துவருகின்றது.

ஆனால், சிங்கள அரசுடனான பேச்சுவார்த்தைக்கு மூன்றாந்தரப்பு மத்தியத்துவம் தேவை என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் 1998 மாவீரர் நாள் உரையில் பிரகடனப்படுத்தியபின்னர் சிங்கள - பௌத்த பேரினவாத அரசு, திரிசங்குசொர்க்கநிலைக்குள் தள்ளப்பட்டது, அத்துடன் 'அமைதிப்பேச்சுக்கு புலிகள் இயக்கம் விரோதமானது, என்றவாறான சிங்கள அரசின் பரப்புரையும், சர்வதேச அளவில் பிசுபிசுத்துவிட்டது,

நோர்வேயின் சிறப்புத்தூதர் எரிக் சொல்கெயிமுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு. புலிகள் இயக்கம் மீதான மேற்குறித்த அவதூறுப் பரப்புரைகளுக்கு சமாதி கட்டிவிட்டதெனலாம்,

அதனால்தான் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பை சிங்களதேசத்துப் பத்திரிகை உலகம் ஜீரணிக்கமுடியாது அவதிப்படுகின்றது.

தலைவர் பிரபாகரனுக்கும் - எரிக் சொல்கெயிமுக்கும் இடையில் நடந்த இரண்டுமணி நேர கருத்துப்பரிமாறலின்போது தலைவர் அவர்கள் பல அரசியல் விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தார்.

தமிழ்மக்கள்மீது சிங்கள அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ள இந்தப் போரின் இன அழிப்புப் பரிமாணத்தையும் - நிலஆக்கிரமிப்பு நோக்கத்தையும் தலைவர் அவர்கள் விரிவாக எடுத்துக்கூறினார். இந்த ஆக்கிரமிப்புப்போராலும் - பொருண்மியத் தடைகளாலும் தமிழ்மக்கள்படும் துன்பதுயரங்களை விலாவாரியாக விளக்கப்படுத்தினார்.

சாவுக்குள்ளும் - போர்நெருக்குவாரத்திற்குள்ளும் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது அந்தத் துயரவாழ்க்கையிலிருந்து தற்காலிக நிம்மதியையேனும் அவர்களுக்கு வழங்காது அமைதிப்பேச்சுக்களில் ஈடுபடுவதில் உள்ள அர்த்தமின்மையை தலைவர் பிரபாகரன் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

சிங்கள அரசுடன் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்கமுன்னர் தமிழர் நிலத்தில் ஒரு சமாதானச்சூழலை சிங்கள அரசு அனுமதிக்கவேண்டிய தேவையை தலைவர் வலியுறுத்திக்கூறினார். பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாக அமைவதற்கு இத்தகைய சமாதானச்சூழல் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

போரைநிறுத்தி சமாதானவழிமுறைகளில் தமிழரின் இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல்தீர்வை வழங்க சிங்கள அரசுக்கு உண்மையிலேயே விருப்பமிருந்தால் அதைச் செயல்மூலம் காட்டும்வகையில் தேவையான நல்லெண்ணச்சமிக்கைகளை சிங்கள அரசு வெளிப்படுத்தவேண்டும் என்றும் கருத்துத்தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சிங்கள அரசுடன் சமாதானப்பேச்சுக்களை நடாத்தி இனச்சிக்கலுக்கு அரசியல் வழியில் நிரந்தரத்தீர்வுகாண புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது என்றும், தலைவர் வலியுறுத்தியிருந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு முழுமனதோடு - நேர்மையாகவும் உண்மையாகவும் ஒத்துழைப்பு வழங்க புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக தலைவர் பிரபாகரன் அவர்கள் எரிக் சொல்கெயிமுக்கு உறுதிகூறியிருந்தார்.

தலைவர் பிரபாகரனைச் சந்தித்தபின்னர் வன்னிவாழ்மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகக் கண்டுணர்வதற்காக சொல்கெயிம் அவர்கள் மக்களையும் - மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தலைவர் பிரபாகரனும் - நோர்வேயின் சிறப்புத்தூதருக்கும் இடையில் நடந்த சந்திப்பையும் - அதன் அரசியல்தார்ப்பரியத்தையும் சிங்கள அரசு சரியாகப் பயன்படுத்தப்போகின்றதா?

நோர்வேயின் சமாதானமுயற்சியை சிங்கள அரசின் இரண்டாம் நிலைத் தலைவரான சிறிலங்காவின் பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் பிரதமராகப் பதவியேற்ற நாளிலிருந்து இன்றுவரை தமிழினத்திற்கெதிரான இனவாதக்கருத்துக்களையே பகிரங்கமாகக் கூறிவருகின்றார். போர்மூலமே தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணப்போவதாக அவர் கருத்துக்கூறிவருகின்றார். சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் சமாதானம் பற்றி ஒப்புக்குப் பேசினாலும் போரை மேலும் - மேலும் விரிவாக்கி இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காண்பதிலேயே தீவிரமாகவுள்ளார். இந்தநிலையில், நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பயன்கிட்டுமா! என்ற கேள்வியே எழுகின்றது. ○





www.eelamview.com

www.eelamview.com



# திறந்தவெளிச் சிறைச்சாலையில் மனச்சாட்சியின் குரல்



செய்தியாளர் நிமலராஜன்

பி. பி. சி. வானொலியின் தமிழ்-சிங்கள சேவைகளின் குடாநாட்டுச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் 10.10.2000 அன்று ஆக்கிரமிப்பாளர்களின் அடிவருடிகளால், அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பத்துவருடகாலமாக பத்திரிகைத்துறையில் பணியாற்றி சிறந்ததொரு செய்தியாளராகப் பரிணமித்த அவர் தனது பணியில் காட்டிய கடமையுணர்விற்கும் நேர்மைப்பண்பிற்கும் வெகுமதியாக, கொலைஞர்கள் அவருக்கு மரணத்தைப் பரிசளித்துள்ளனர்.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொல்லப்பட்ட செய்தி தமிழ்மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த மனவேதனையையும் அளித்துவிட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக சிங்கள இராணுவத்தின் கிடுக்கிப்பிடிக்குள் சிக்கி அவலவாழ்வை அனுபவித்துவரும் யாழ்ப்பாணமக்களது துன்ப - துயரங்களையும் இந்த இராணுவ ஆட்சியை மூடிமறைக்க சிங்கள அரசு எடுக்கும் கண்துடைப்பு அரசியல் நடவடிக்கைகளையும் வெளிஉலகிற்கு அம்பலப்படுத்துகின்ற அரியபணியை நிமலராஜன் ஆற்றிவந்தார்.

தமிழ்-சிங்கள மொழிகளில் நல்ல தேர்ச்சிபெற்றிருந்த அவர் பி.பி.சியின் தமிழோசை மற்றும் அதன் சிங்கள மொழி ஒலிபரப்பான சந்தேசிய உட்பட வெளிநாட்டுத் தமிழ்வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக திறம்படப் பணியாற்றி - மக்களின் அபிமானத்தையும் பெற்றிருந்தார்.

கணீரென்ற வெண்கலக்குரலில் குடாநாட்டு நிலவரங்களை செய்தியாகத் தொகுத்து நிமலராஜன் வழங்கும் விதம் அலாதியானது,

அவர் வழங்கும் செய்திகள் தகவல் தெளிவுடன் இருக்கும். எந்தவிதமான பூடகத்தன்மைகளும் இல்லாது வெளிப்படையாக செய்திகளைக் கொடுப்பது அவர் கடைப்பிடிக்கும் தனித்துவமான பாணி. அவர் வழங்கும் செய்திக் கண்ணோட்டங்களில் நேர்மையான விமர்சனம் இருக்கும் குடாநாட்டு மக்கள் சந்திக்கும் அவலவாழ்வை அம்பலப்படுத்தும்போது அவரது குரலில் தார்மீகக் கோபம் கொப்பளிக்கும். அதுமட்டுமல்ல அவரது செய்திகளிலும் - அரசியல் கண்ணோட்டங்களிலும் - அம்பலப்படுத்தல்களிலும் தமிழ்த்தேசிய உணர்வு மையசக்தியாகத் திகழும். மக்களின் துன்ப - துயரங்களை எடுத்துக்கூறி, அவற்றிற்குக் காரணமானவர்களை சுட்டுவிரல் நீட்டி பகிரங்கமாகவே குற்றஞ்சுமத்துமபோது அவரது கருத்துக்கள் மௌனமாக உள்ள குடாநாட்டு மக்களது மனச்சாட்சியின் குரலாக ஓங்கி ஒலிக்கும்.

இவை காரணமாக நிமலராஜனுக்கு தமிழ்மக்கள் மத்தியில் பேரபிமானமும் சந்தேசியவின் சிங்கள நேயர்கள் மத்தியில பிரபலமும் - படையினர் மற்றும் அடிவருடிகள் மத்தியில் வெறுப்புணர்வும் இருந்து வந்தது.

சர்வதேச வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக நிமலராஜன் பணிசெய்யத்தொடங்கும்வரை குடாநாட்டு மக்களின் துயரவாழ்க்கை வெளி உலகிற்கு சரியாகத் தெரியவரவில்லை.

யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சிக்குப் பதிலாக சிவில் நிருவாகம் அமைக்கப்பட்டு மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டது என்றும், தமிழ்க்கட்சிகள் அங்கே ஜனநாயகமுறையில் அரசியல் வேலைத்திட்டங்களைத் தொடங்கிவிட்டன என்றும்; குடாநாடு புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றது என்றும் சிங்கள அரசு வெளியிட்ட செய்திகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருந்தன.

*தனிஒருவனைக்கொண்ட படைபோல நிமலராஜன் தனித்துநின்று குடாநாட்டு நிலவரங்களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கும் - அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்துவந்தார்.*

ஆனால், நிமலராஜனூடாக யாழ்ப்பாணத்தின் உண்மைநிலவரங்கள் படிப்படியாக வெளிவரத்தொடங்கின, படையினரின் அட்டூழியங்கள் அம்பலத்துக்கு வந்தன. தமிழ்க்குழுக்களின் அராஜகங்கள் வெளிக்கொணரப்பட்டன. சிங்கள அரசின் கண்துடைப்பு அரசியல் தோலுரித்துக்காட்டப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வியல் அவலங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

ஆனையிறவுத்தள அழிப்புடன் தென்மராட்சிப் பகுதிகளுக்குள் சண்டை பரவியபோது அங்கிருந்த மக்களின் உயர்பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்து செல்லுமாறு புலிகள் இயக்கம் வேண்டுகோள்விடுத்தது. ஆனால் படையினர் தமது பாதுகாப்பிற்காக அம்மக்களை வெளியேறவிடாது தடுத்து அவர்களுக்கு ஒரு பேரழிவை உண்டுபண்ண முயன்றபோது அம்மக்களின் நிலையை உலகறியச் செய்விப்பதற்காக உயிராபத்தையும் பொருட்படுத்தாது நிமலராஜன் நேரடியாகவே அப்பகுதிகளுக்குச் சென்றார். அந்த மக்களுடன் உரையாடி அங்கிருந்து நிலைமைகளை வானலைகளில் பரப்பி இராணுவத் தலைமைப்பீடத்தை நெளியவைத்து - சிங்களஅரசைச் சிக்கலுக்குள்ளாக்கினார்.

இவரது செய்திகளால் உத்வேகமடைந்த உலக மனிதஉரிமை அமைப்புக்கள் சிங்கள அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து மக்களின் சுதந்திரமான இடப்பெயர்வுக்கு வழிசமைத்தன.

யாழ்ப்பாணத்தில் சாதாரண இளைஞர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு, கொல்லப்பட்டவர் புலிஉறுப்பினர் என படையினர் விளக்கம்சொல்லி செய்தி வெளியிடுவது வழமை. ஆனால், இராணுவத்தின் அந்தச் செய்தியையும் வானலைகளில்பரப்பி - கொல்லப்பட்டவர் ஒரு மாணவர் அல்லது ஒரு அப்பாவி இளைஞன் என நிரூபணங்களையும் எடுத்துக்கூறி அது ஒரு மிலேச்சத்தனமான படுகொலை என உலகிற்கு நிமலராஜன் ஒப்புவிக்கும் விதம் அவரது செய்தி வழங்கும் பாணியின் தனிரகமானது.

இவைகாரணமாக படையினரின் எச்சரிக்கைகளுக்கும் - பயமுறுத்தல்களுக்கும் நிமலராஜன் பலதடவைகள் உள்ளாகியிருந்தார்.

படையினரின் இரும்புப்பிடிக்குள் நடைபெறும் யாழ்ப்பாணத்தின் ‘ஜனநாயக அரசியலையும்’ அதை நடாத்தும் தமிழ்க்குழுக்களின் அடாவடித்தனங்களையும் மிகத் தெளிவாகவே, அவர் உலகிற்கு எடுத்துக்கூறினார். அண்மையில் நடந்துமுடிந்த தேர்தல்கூத்தில் தமிழ்க்கட்சிகள் குறிப்பாக ஈ. பி. டி பியினர் தீவகத்தை ஒரு அடிமைத்தீவாக வைத்திருக்கின்றனர். அங்குள்ள மக்களை அடிமைகள் போல தம்விருப்பப்படி ஆட்டுவிக்கின்றனர் என விமர்சனம் செய்தார். படையினரின் பாதுகாப்பில் இந்தத் துரோகிகள் நடாத்தும் கேலிக்கூத்தான அரசியலை எள்ளிநகையாடி, நிமலராஜன் செய்திகளை வெளியிட்டார்.

இதனால், தமிழ்க்குழுக்களின் குறிப்பாக ஈ. பி. டி. பியினரின் கொலை மிரட்டல்களுக்கு இவர் உள்ளானார்.

எனினும், இந்தவகை மிரட்டல்களைக்கண்டு நிமலராஜன் தனது பணியில் தடுமாறவில்லை. *தனிஒருவனைக்கொண்ட படைபோல நிமலராஜன் தனித்துநின்று குடாநாட்டு நிலவரங்களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கும் - அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்துவந்தார்.*

யுத்தகளத்திற்கு நேரடியாகச்சென்று போர்ச்செய்திகளைத் திரட்டும் பத்திரிகையாளர்கள் ஒருவகை. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் வசித்தபடி- ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுள் ஒருவராக இருந்துகொண்டே - அரசியல், இராணுவ நிலவரங்களை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள் வேறொருவகையினர்.

முதல்வகைச் செய்தியாளர்களுக்குச் சாவு ஒருதடவைதான்வரும். ஆனால் அந்தவகைச் செய்தியாளர்கள் சாவை சதா சந்தித்தபடியே வாழ்க்கையை ஓட்டுவார்கள் நிமலராஜன் இந்தவகைச் செய்தியாளராகவே பணியாற்றினார். பலமுனைகளிலிருந்தும் சாவை சதா சந்தித்தபடியே - சாவுக்குப் பயப்படாது அவர் துணிச்சலுடன் பணியாற்றினார்.

ஒரு செய்தியாளன் என்ற நிலைக்கும் அப்பால் - குடாநாட்டுமக்களின் அவலவாழ்க்கையை துணிச்சலுடன் உலகிற்கு எடுத்துக்கூறும் ஒரு *மக்கள் பிரதிநிதி போலவே நிமலராஜனின் செயற்பாட்டை தமிழ்மக்கள் கருதினர்.*

அதனாலேயே, கொலைஞர்களின் குண்டுக்கு அவர் பலியானபோது குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழீழ மக்கள் அனைவருமே தங்களது குரலை இழந்துவிட்டதுபோலத் துயரப்பட்டனர். அவரது சாவுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கல் கூட்டங்களை நடாத்தினர் - அவரின் உயிரைப்பறித்த கொலைஞர்களைக் கண்டனம்செய்து - தமது கோபத்தை வெளிப்படையாகக் காட்டினர்.

குடாநாட்டுச் செய்தியாளராக நிமலராஜன் பணியாற்றிய காலம் தமிழ்மக்களால் என்றும் நினைவுகூரப்படும். *நிமலராஜன் என்ற செய்தியாளனும் தமிழரின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் நிலையான இடத்தைப் பெறுவார்.*



www.eelamview.com

# ஆயிரம்தலை அளந்து ஆட்சியேறிய அபூர்வ சிந்தாமணி

ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி பற்றித்தானே கேள்விப்பட்டிருக்கின்றோம். இதுவென்ன புதிய தலைப்பு என எம் வாசகர் வியப்படையக்கூடும். எம் மக்களின் ஆயிரமல்ல பல்லாயிரம் தலைகளை வாங்கிய பின்னரும் சென்ற 10ம் திகதிய தேர்தலில் வெற்றிகிடைப்பதென்பது அன்று நிச்சயமற்ற நிலையிலே அம்மையாருக்கு இருந்தது. பெரும்போரை நடத்தியும் அமைதிப்பொதியென மாயவித்தை காட்டியும் பேரினவாதிகளையோ தமிழ், சிங்கள மக்களையோ ஏன் சருவதேசத்தையோ திருப்தி செய்ய முடியாத கையறு நிலையே ஆறாண்டின்பின் அம்மையார் எதிர்நோக்கிய நிலை. அவ்வாறாயின அம்மையாரின் முன்னணி எவ்வாறு 107 இடங்களைப் பெறவும் ரணில் 89 இடங்களைப் பெறவும் நேர்ந்தது என்கிற கேள்வி இங்கே எழுகிறது அல்லவா?



இது எமக்கு அவசியமற்ற கேள்விதான். இருந்தபோதும் இக் கேள்வியின் விடை எமக்குத் தருவது பெரும் வரலாற்றுப் படிப்பினை. எப்படியும் வெல்லவேண்டுமென்பதற்காக அம்மையார் என்ன செய்தார் பாருங்கள். அக்டோபர் 10ம் திகதிக்கு சில நாட்கள் முன்னதாகவே அம்மையார் வெகுவேகமாக இயங்கத்தொடங்கினார். இதுவரை தான் சொன்ன பொய்களை அவை மிகச் சாதாரணம் என நிரூபித்தார். தனது வக்கிரம பிடித்த மூளையிலிருந்து இனவாத நஞ்சு நுணுக்கமாக நுணுக்கப்பட்ட இமாலயப்பொய்களை கதைகளாக உற்பத்தி செய்தார். உச்சப்பொய்களைத் தானும் அதியுச்சப்பொய்களை *''நானும் வந்தேனய்யா - நாகரிகக் கோமாளியென''* வந்த பிரதமர் மூலமும் வெளிவிட்டார். அவரது இடக்கை வலக்கைகள் எனப்படும் 'நவீன' நாகரிகக் கோமாளியான திசநாயக்காவும் மங்கள முனசிங்காவும் அவரது மூலக்கதைகளிலிருந்து பல குட்டிக்கதைகளை உருவாக்கி நாடெங்கும் பரப்பினர். இக்கதைகள் சிங்கப்பூரில் பிரபாகரன் கடிதத்தை ரணில் பெற்றதிலிருந்து தொடங்கி ரணிலும் புலிகளும் தன்னைக் கொலைச் சதியென வளர்ந்து ஆனையிறவை பிடிக்கும் கதை. ரணிலும் பிரபாகரனும் செய்த உடன்பாட்டின பிரதி இதோ என படிப்படியாக உச்சம் பெற்று தேர்தல் தினத்திற்கு முதல் நாள் புலிகளை போர்மூலம் அழித்துவிட்டுத்தான் மறுவேலை என சூளுரைத்ததோடு முற்றுப்பெற்றது.

ஏற்கெனவே போரின் உயிரிழப்புக்கள், பொருண்மிய நெருக்கடிகள், வன்முறை கட்டுக்கடங்காமல் வழியும் சமூகச்சூழல் போன்றவற்றால் மனநிலை பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் அபூர்வ சிந்தாமணியின் இத்தகைய அதிர்ச்சி ஊட்டும் கதைகளால் முற்றிலுமாக குழம்பி அம்மையாரின் *பணயக் கைதிகளாகினர்*. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் விதத்தில் அரசியல் காடைத்தனமும் பெரும் தேர்தல் மோசடிகளும் அரங்கேறின. கண்டி, அனுராதபுரம். புத்தளம். மாத்தளை, கம்பகா, கேகாலை, குருநாகல், நுவரெலியா போன்ற மாவட்டங்களில் மிகப் பரவலாகவும் *குறிப்பாக 17 தேர்தற்தொகுதிகளில்* அப்பட்டமாகவும் வாக்குமோசடிகள் நடைபெற்றன என்பதே தேர்தலைக் கண்காணித்த குழுக்களின் ஏகமனதான முடிவு. இங்கெல்லாம் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது இவர்கள் வேண்டுகை. ஆனால் சிறிலங்காவின் வரலாற்றில் இத்தகைய முன்மாதிரிகள் இல்லையென்பது உலகறிந்த உண்மை. இப்போது தெளிவான முடிவொன்றிற்கு நாம் வரமுடியும். உண்மையிலே தேர்தல் முடிவுகள் இவ்வாறுதான் இருந்திருக்கவேண்டும். ஒன்றில் பொதுசன முன்னணி பெற்ற இடங்கள் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றதாக அமைந்திருக்கவேண்டும். அல்லது இருகட்சிகளுமே ஏறத்தாழ சமமான இடங்களை பெற்றிருக்கவேண்டும்.

தமிழீழத்தில் நடைபெற்ற தேர்தல்கள் பற்றி நாம் என்ன சொல்ல வேண்டும்? இது வெறும் கேலிக்கூத்தென்பது கண்காணிப்புக்குழுக்களின் முடிவு. இத்தேர்தல் பற்றி சி. அ. யோதிலிங்கம் (அரசியல் திறனாய்வாளர்) வீரகேசரி 16/10 இளங்கதிர் இணைப்பில் கூறுவதை வாசியுங்கள் ''வடக்கு, கிழக்கு தமிழர்களின் நிலையை பொறுத்தவரை இன்றைய *அரசியல் நிலையென்பது* இன அரசியலின் மூன்றாம் கட்ட நிலையாகும். மூன்றாம் கட்ட நிலையென்பது *அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுகின்ற நிலையே. இக்கட்டத்தில், தேர்தல், அரசியல் பிரதிநிதித்துவம் என்பதெல்லாம் தேவையற்ற ஒன்றே. அதனை மக்கள் தெளிவாகவே காட்டியுள்ளார்கள். பெரும்பான்மை மக்கள் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியுள்ள நிலையும வாக்குகளை நிராகரிக்கச் செய்த நிலையும் ஏனோதானோ என்று*

வே. பாலகுமாரன்

*வாக்களித்த நிலையும் இதனையே வெளிப்படுத்தியுள்ளன. அளிக்கப்பட்ட வாக்குகள் கூட மிதக்கும் வாக்குகளாகவுள்ளன- மிதக்கும் வாக்குகளின் வாக்களிப்பு நடவடிக்கைகளில் கண்ணுக்கு உடனடியாகத் தெரிகின்ற பிரச்சினைகளே முதன்மையான நிலையிலிருக்கும்....''*

1947ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலே இம்முறை நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள்தான் தமிழ் மக்களுக்கு மிகத்தெளிவாக எவ்வித மயக்கமுமற்ற அப்பட்டமான ஒரு வரலாற்றுண்மையை *அதிர்ச்சியூட்டத்தக்க வகையில் வெளிப்படுத்துகின்றன.* இனிவரும் காலத்தில் இவ் வரலாற்றுப் படிப்பினைகளின் விளைவுகளுக்கு எவ்விதம் எம்மக்கள் முகம் கொடுக்கப்போகின்றார்கள் என்பதிலேயே எமது அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது. இதுவே நாம் மனம்கொள்ள வேண்டிய செய்தி.

மிகத்தெளிவாக எவ்வித மயக்கமுமின்றி முதன்மையாக வெளிப்படும் பாடமென்ன? சனநாயக முறைமை மிக ஆழமாக வேரோடக்கூடிய நாடென அன்று மேற்குலகால் விதந்துரைக்கப்பட்ட சிறிலங்காவின் இன்றைய இழிநிலை உலகிற்குத் தெரியாதா? சனநாயக முறைமையின் உயிர்நிலையான *நாடாளுமன்ற* தேர்தல் *முறையே சனநாயக முறைமையையே குழிதோண்டிப்புதைக்குமளவிற்கு மென்றுவிட்ட விபரீதநிலையின* பின்னரும் மேற்குலகம் மௌனம் காப்பதேன்? பெரும் தொகையாகவும் பரபரப்பான அறிக்கைகளை விடுத்தும் சனநாயகக் காவலர்போல் வந்திறங்கிய ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் எல்லோரும் போகும்போது வாலைச் சுருட்டிச் சென்றதேன்? அல்லது நடந்து முடிந்த மோசடிகளுக்கும் காடைத்தனங்களிற்கும் நேரடியான சாட்சிகளான சிங்கள மக்களும் அவர்களது காவலர்களான பௌத்த மகாசங்கத்தினரும் *ஏன் ஐக்கிய தேசியக கட்சியினரே கூட* போதுத்தெழவில்லை? தேர்தல்களை நிராகரிக்க கோரவில்லை? சனநாயகம் காக்க முன்வரவில்லை? *ஏன்? ஏன்? ஏன்?*

ஏனென்றால் சருவதேசத்தை பொறுத்தவரையிலும சரி, சிங்களவரை பொறுத்தவரையிலும் சரி, எல்லாமே ஒன்றுதான். *அதாவது எக்கட்சி பதவிக்கு வந்தாலும் எல்லாமே ஒன்றுதான். வெளிநாட்டவர் மூலதனத்திற்கு பாதுகாப்புத்தான்.* எவர் கட்சியமைத்தாலும நாடாளுமன்றம் தமிழ்மக்களை ஒடுக்கும கருவிதான். இது அன்றுதொட்டு இன்றுவரை தொடரும்கதை. தமிழமக்களை அரசியல் அரங்கிலிருந்தே அகற்றிவிடும் ஒரேநோக்கோடு செயற்படுவதையே இலக்காகக்கொண்டு சிங்களத்தின் நாடாளுமன்ற ஆட்சிமுறை உருவாக்கப்பட்டது. வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப்பாருங்கள். 1919 இல் உருவாகிய இலங்கைத் தேசியக காங்கிரசில ஒன்றாகவிருந்த சிங்களவர் சோல்பரியின அரசியல் திட்டத்தில் சனநாயகம என்பது பெரும்பான்மையினர் ஆட்சி என்கிற வரியை மட்டும் நன்றாகப் புரிந்ததின விளைவாக தமிழரை நட்டாற்றில் விட்டோடிய நாளிலிருந்து இன்று அம்மையார் காலாவதியாகி கலைக்கப்பட்ட நாடாளுமன்றிற்கே உயிரூட்டி அவசரகாலச்சட்டத்தை நீடித்த காலம்வரை - (என பதினோராவது நாடாளுமன்றின முதலாவது பணியே அவசரகால நிலையை நீடிப்பதாகவே அமைந்ததல்லவா) சிறிலங்காவின நாடாளுமன்ற வழமை இதுதான.

இம்முறை நடந்தேறிய தேர்தலின் போது மூன்று பிரதான சிங்களக்கட்சிகளுக்கிடையில் என்ன பிரதான வேறுபாட்டை சிங்களவரால் கண்டிருக்கமுடியும்? இம்மூன்று கட்சிகளும சிங்கள மக்களுக்கு சொன்ன அரசியல் செய்தி என்ன? போரே முடிந்த முடிவு என்றவர் அம்மையார். (தமிழருக்கு கடுகளவு உரிமையைத் தன்னும வழங்காத) தீர்வுப்பொதியடங்கிய அரசியல் யாப்பினை இறுதிவரை எதிர்ப்போம் என்றவர் ரணில். போரும் முறையாக நடத்தப்படும - பொதியும் நெருப்புக்குள் வீசப்படும என்றது ஜேவிபி. ஜே. வி. பி வைக்கும் தீர்வு என்ன? தங்களை நம்பி வாக்களித்ததாலா (?) சுயநிலையை/தன்னாட்சி உரிமையற்ற தமிழ்மக்களுக்கு சோசலிச (??) அடிப்படையில தீர்வு வழங்கப்படும்; இதுதான் அவர்களின் தீர்வு இப்போதுள்ள நிலவரங்களின்படி வருங்காலத்தில் ஜே. வி. பியே இரண்டு பேரினவாதக் கட்சிகளை விடவும், தீவிர பேரினவாத சிங்கள 'உருமய' வை விடவும் சிங்கள மக்களால் விரும்பப்படும் இளமைத்துடிப்புள்ள *வேகமான புதிய வகை பேரினவாதக் கட்சியாகும் என* கணிக்கப்படுகிறது. இதுபற்றி யோதிலிங்கம் பினவருமாறு கூறுகிறார், '' உண்மையிலே மக்கள் விடுதலை முன்னணியே எதிர்பாராக்காத அளவிற்கு இவ் எழுச்சி (தேர்தல் முடிவு) நடைபெற்றுள்ளது. மிதக்கும்

*( 13ஆம் பக்கம் பார்க்க )*



www.eelamview.com

www.eelamview.com



# நீரில் கரைந்த நெருப்பு

கண்டிவீதியை ஊடறுத்திருந்த எமது பாதுகாப்பு வியூகத்தை உடைத்து, எதிரி உட்புகுந்துவிட்டான். எமது போர்ப்பலத்தை சிதறடித்தவாறு எல்லாமுனைகளாலும் எதிரி தாக்கினான். எமக்கு எவ்வகையிலும் சாதகமற்ற ' மரணகளமாய் ' மாறியிருந்தது அன்றைய களம்.

அன்று ஏப்ரல் - 10. 2000. விடுதலைப் போர்க்களத்தில் புலிகள் இயக்கம் திக்குளித்த நாட்களுள் அன்றைய நாளும் ஒருநாள். ஆனையிறவை முற்றுகையிட்டிருந்த புலிகளின் இத்தாவில போர்க்களம் அது. அமைதியாகவே விடிந்திருந்த அந்தப் போர்க்களத்தை சிறிதுநேரத்திலேயே பெரும எரிமலை போல் வெடிக்கச் செய்தான் எதிரி. புலிகளை மட்டுமல்ல, தமிழனின் வீரம் பேசி எழுந்துநின்ற அந்தச் சின்னஞ்சிறு பிரதேசத்தையே பூமியிலிருந்து உடைத்தெறிந்துவிடப்போவது போல் எறிகணைகளை ஆயிரம் ஆயிரமென இடைவிடாது துப்பின எதிரியின் பீரங்கிவாய்கள். எம் தாய்மண்ணை பேரரக்கன்போல் ஏறி மிதித்தபடி ராங்கிகள் உள்ளிட்ட கவசவாகனங்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு எம் வீரர்களை மூன்று திசைகளாலும் சூழ்ந்துகொண்டு களமிறங்கின. எல்லாமே 30, 000 எதிரிகள் நடுவே நிற்கும் நூற்றுக்கணக்கிலான புலிவீரர்களை மட்டுமே எதிர்கொண்டன. ஆயினும் எதிரியை முறியடித்தேயாகவேண்டிய நிலை: ஆனையிறவை வீழ்த்துவதற்கான அடுத்தகட்டப் படைநகர்த்தல் அன்றைய சண்டையின் முடிவிலேயே தங்கிநின்றது. தன்போராளிகளின் மனவுறுதியை அதிகம் நம்பிய தலைவர் போராளிகளோடு போராளியாய் களத்தில் நின்று சமரை வழிநடத்தினார் தளபதி கேணல் பால்ராஜ். அவருக்குத் துணையாய் களத்தின் மையத்தில் நின்றான் ராஜன்.

1990இன் முற்பகுதியில் மன்னார் மாவட்ட போர்க்களங்களில் சிறிய அணிகளுடன் களமிறங்கி தமிழீழத்தின் 35 வரையான போர்க்களங்களில் அணிகளை வழிநடத்தி, பெரும் போர்வீரனாய் உருவெடுத்துநின்ற எங்கள் தளபதி ராஜனின் இளவாழ்வின் அத்தியாயத்தை புகழ்பூத்த இந்த இத்தாவில் ( கண்டிவீதி ) போர்க்களத்திலிருந்து தொடங்குவதுதான் எனக்குச் சரியாகப்படுகின்றது.

நண்பகல் கடந்துவிட்ட நேரம். களத்தின் மேற்குமுனையில் யாழ்ப்பாணப்பக்கமாய் கண்டிவீதியை மூடியிருந்த காவலரண்களில் கணிசமானவை எதிரியிடம் வீழ்ந்திருந்தன. '' றோமியோ றோமியோ '' என ராஜனின் ' சங்கேத'ப்பெயரை அழைத்த அலைவரிசைகளே எங்கும் நிறைந்திருந்தன. ஒவ்வொன்றிற்கும் பதில் சொல்லி, தளபதி பால்ராஜ்சின் கட்டளைகளை நிறைவேற்றி, முறியடிப்பு அணிகளை வழிநடத்திக்கொண்டிருந்தான் ராஜன். அந்தச் சிறிய களப்பகுதியில் ஏற்கனவே சூழ்ந்துவிட்ட எதிரிகள் நடுவே, கணக்கின்றி எதிரி ஏவிய எறிகணைகள், ரவைகளுக்கிடையே அத்தனை விரைவாய் விபரீதம் ஏதுமின்றி அவன் செய்துமுடித்த அந்தப்பணி அவ்வளவு இலகுவானதல்ல; எந்தவொரு போரியலாளனையும் அது வியக்கவைக்கும்.

அணிகள் களமிறக்கப்பட்டன. பறிகொடுத்த காவலரண்களை ஒவ்வொன்றாய் எம் வீரர்கள் மீட்க, எரிமலை நடுவே நின்று அணிகளை நகர்த்தினான் ராஜன். எதிரியின் நடவடிக்கை முழுமையாய் முறியடிக்கப்பட இருந்த கட்டம்; தலது அவமானத்தை எதிரித்தலைமை அடையத்தொடங்குவதான நேரம்; மீண்டும் ஆனையிறவுத்திசையிலிருந்து மூன்று முனைகளால் எம் அரண்களை உடைத்தான் எதிரி. நிலைமை சிக்கலாகியது. மீண்டும் எதிரிக்கு சாதகமாய் மாறிவிட்டது களநிலை. நிலைமைகளை கணிப்பிட்ட தளபதி கேணல் பால்ராஜ், மேற்குமுனைச் சண்டைகளை அப்படியே நிறுத்திவிட்டு, முதலில் கிழக்கு முனையில் - ஆனையிறவுப் பக்கமிருந்து முன்னேறிய எதிரியை முறியடிப்பதற்கு முடிவுசெய்தார்.

**அ. பார்த்திபன்**

அதையும் செய்துமுடிக்க வேண்டியவன் ராஜன்தான். அவனிடம் அதற்கான கட்டளை வந்து சேர்ந்தது.


சுழன்றடித்த புயலைப்போல பல மணித்தியாலங்கள் ஓய்வற்று நீண்டு சென்றது அந்தச் சமர். நள்ளிரவை அண்மித்த நீண்டசமரின் முடிவில் எதிரியின் கிழக்குமுனை நகர்வை முழுமையாய் முறியடித்து தன் போராளிகளின் வீரத்தையும், போராற்றலையும் நிரூபித்தான் ராஜன். மேற்குமுனையில் எதிரி கைப்பற்றிய சில அரண்களுக்கு மாற்றீடாய் சிறிதுதூரம் பின்வாங்கி புதியநிலைகளை அமைப்பதாய் முடிவுசெய்யப்பட்டது. விடிவதற்கிடையில் அது செய்துமுடிக்கப்பட்டே ஆகவேண்டும். அதையும் செய்ய வேண்டியவன் ராஜன்தான். அன்று முழுவதும் போராளிகளும் ராஜனும் ஓயவேயில்லை. ஒருவகையில் ஆனையிறவின் தீர்மானம் அவர்கள் கையிலேயே இருந்தது. மறுநாள் விடிந்ததும் '' புலிகளால் இனிமேலும் நின்றுபிடிக்கமுடியாது '' என்ற அசையாத நம்பிக்கையில் கைப்பற்றிய பகுதியிலிருந்து மீண்டும் புதிய அணிகளைக் களமிறக்கினான் எதிரி. அன்றைய சண்டையின் முடிவு, ராஜனின் ஓய்வற்ற உழைப்பிற்கும், அவனது போராற்றலிற்கும் சாட்சியமாய் முடிந்தது. பேரிழப்புடன் எதிரி முடங்கிக்கொண்டான். பெரும் படைப்பலம் ஒன்றால் சின்னாபின்னமாக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை அபாயகரமான அதே களத்தில் வைத்தே அத்தனை வேகமாய் சீர்செய்து முடிக்க புலிகளால் எப்படி முடிந்தது? என்று எவராவது கேட்டால் அவர்கள் களத்தில் தெரியும் ராஜனையே முழுமையாய் படிக்கவேண்டும் என்றுதான் நான் சொல்லவேண்டும்.

ராஜன்! அந்தக் 'கறுத்தப் பொடியனை' நீங்கள் எப்போதாவது கண்டிருக்கிறீர்களா, அவன் நேசித்த மக்களே? போர்க்களத்திலேயே தன் போராட்டப் பணிகளை ஆரம்பித்து இறுதிவரையும் அக்களங்களிலேயே உயிர் கொண்டு உழைத்த அந்த அற்புதமான வீரனை நீங்கள் எப்போதாவது அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் பெருமை கொண்ட வெற்றிகள் பலவற்றின் பின்னால் தெரிந்த அவனது வீரத்தையும், அர்ப்பணிப்புகளையும் நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? '' இந்தச் செல்லடிக்கிள்ளையும் களத்துக்கொண்டு உலருணவு செய்துகொண்டு இந்த அப்பாக்களும், அம்மாக்களும் எங்களைத்தேடி வருகினம்தானே '' என்று அடிக்கடி சொல்லும் உங்கள் பிள்ளையை உங்களுக்குத் தெரியுமா, அவன் மக்களே? எதற்குமே சந்தர்ப்பம் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை: பத்து வருடங்கள் உங்களுக்காய் உழைத்தவன் உங்களுக்குத் தெரியக்கூடியதாய் நின்றது குறைவு. எனினும் உங்கள் நினைவுப் பதிவுகளை ஒருமுறை மீட்டிப்பாருங்கள்.

கிளிநொச்சியில் நிலையமைத்து வருடக்கணக்காய் ஓய்வின்றி உங்களைக் காத்த ' காவற்தெய்வங்களை ' ஆசையாய் அரவணைக்க ' சொட்டைச் சாப்பாடுகள் ' கொண்டு ஓடோடிப் போயிருப்பீர்களே? அப்போது சிலவேளைகளில உங்களோடு தன் '' செல்லமொழியில் '' கதைத்திருப்பான் உழைத்துக் கறுத்து மெலிந்த உங்கள் பிள்ளை. ஓயாத அலைகள் - 03 இல் பரந்தன் படைத்தளம் வீழ்ந்தபோது நீங்கள் மகிழ்ச்சியால் துள்ளித்திரிய, அதற்காய் உழைத்துமுடித்து அடுத்த வெற்றிக்காகவும் உழைக்கத் தொடங்கிவிட்ட அவன், தன் எம் - 16 துப்பாக்கியுடன் நீண்டதூரம் ' சைக்கிள் ' உழக்கி பின்னணியிலிருந்து தளத்திற்கு போவதற்காய் அடிக்கடி உங்களோடு பயணித்திருப்பான், அந்த எளிமையான தளபதி. இவற்றைவிட அவன் உங்களுக்குள் நின்றதை நான் அறியவில்லை:

☼ ☼ ☼

'' அண்ணை ஒண்டும் யோசிக்காதேங்கோ நான் எல்லாம் செற்றப்பண்ணிப் பிடிச்சுத்தருவன் '' இறுக்கமான கட்டங்களில் ராஜனிடம் இருந்துவரும் இந்த வார்த்தைகளை மூத்த தளபதிகள் எல்லோரும் ஒருங்குசேர நினைவுகூருகின்றனர். நெருக்கடியான எத்தனையோ கட்டங்களில் புத்துணர்ச்சியளித்த அவனது இந்த வார்த்தைகள் நம எல்லோருக்குள்ளும் இன்னமும் பசுமையாய் —



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி

**லெப். கேணல் ராஜன் / ராஜசிங்கம்**

வேலாரியான் காணிக்கைநேசன்

பெரியமடு, மன்னார்

| தாயின் மடியில் | தாயக மடியில் |
| --- | --- |
| 02-02- 1973 | 26-06-2000 |





www.eelamview.com

www.eelamview.com



வன்னிக்களத்தில் உச்சமாய் அமைந்த 'ஜயசிக்குறுய்' எதிர் நடவடிக்கைக் காலம். புலிகளை நெருக்கடிக்குள் தள்ளவந்தவர்களை புலிகள் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் விந்தையை உலகம் வியப்புடன் பார்த்திருந்தது. களத்தில் எதிரி நினைப்பதை அடையமுடியாதபடி நாம் நினைத்தபடி எதிரியை ஆட்டுவித்த நுட்பமான போரரங்கைத் தலைவர் நெறிப்படுத்திக் கொண்டிருந்தார், களத்தில் நின்ற ஒவ்வொரு புலிவீரனது கைகளிலும் அன்று எம் தேசத்தின் வாழ்விருந்தது. எதிரி தான நினைத்ததை அடைந்துவிடும் எந்தவொரு கட்டமும் போரரங்கில் பாரிய மாற்றங்களை கொண்டுவந்துவிடும். அத்தகைய களத்தில் ராஜன் சந்தித்த சண்டைகள் பல. அதுவும் வன்னித்தளத்தின் கிழக்கையும், மேற்கையும் இணைக்கும் ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாய் இரணைமடுவினூடான பாதைமட்டுமே மாறிவிட்ட சூழலில் அதை இராணுவம் கைப்பற்றுவது சண்டையில் பாரிய திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய காரணியாய் இருந்தது. அப்படியே ஒருநாள் நடந்தது. எதிரிக்குச் சாதகமாய் மாறியிருந்தது களநிலை. அதையே தலைகீழாய் மாற்றிவிட்ட சண்டையில் ராஜன் என்ற புயல் சுழன்றடித்தவிதம் இப்போதும் அவனை வழிநடத்தியவர்களின் கண்களில் இருக்கிறது.

'' அன்று 1998 யூன் 04ம் திகதி. கிளிநொச்சி முனையில எதிரி பெரும் படையெடுப்பை செய்தான். எமது பாதுகாப்பு நிலைகளில் உடைவை ஏற்படுத்தி பல நூற்றுக்கணக்கில் எமது பகுதிக்குள் எதிரி நுழைந்துவிட்டான். பல மணித்தியாலங்களாய் சண்டை தொடர்ந்திருந்தது. எனினும் எதிரி தன் வெற்றியிலக்கை ( இரணைமடுவை நோக்கியது ) ஏறத்தாழ அடைந்துவிடக்கூடியதாகவே களநிலை இருந்தது. எப்படியாயினும் அன்றைய நடவடிக்கையை முறியடிப்பதே எமது இறுதிமுடிவு. முன்னணியில் நின்ற அணிகள் கணிசமான இழப்பை சந்தித்திருந்தன. இந்நிலையில் இந்த முறியடிப்பை எப்படிச் செய்துமுடிப்பது? பல மைல்களுக்கு அப்பால் நிலைகொண்டிருந்த 'றோமியோ'வின் அணியைத்தான் நான அழைத்திருந்தேன். எதிரி உறுதியாய் நிலையெடுக்கமுன் 'றோமியோ'வின் அணியை சண்டைமுனைக்கு வேகமாய் நகர்த்துவது கடினமானது அவனுக்கு நான் கட்டளையிட்டபோது அவனிடமிருந்துவந்த நம்பிக்கையும், துடிப்பும் நிறைந்த பதில் என்னுள் பிரகாசித்தது; எவரும் நினைத்துப் பார்க்காத வேகத்தில், பலமைல்கள் ஓட்டத்தில் எதிரியின் எறிகணைகளைக் கடந்து சண்டைமுனையில் தன் அணியுடன் வந்தவுடனேயே அவன் முறியடிப்புச் சமரை தொடங்கவேண்டியிருந்தது. கடைசிவரை இறுக்கமாகவே தொடர்ந்தது சண்டை. அப்போது 'அண்ணை நான் விடமாட்டன் பிடிச்சுத்தருவன்' என்ற அவனது நம்பிக்கைதரும் குரலையே கேட்டேன். சோர்ந்துபோகாது தன் அணியை வழிநடத்திய றோமியோவின் விடாமுயற்சி இறுதியில் எதிரியை ஆட்டிவைத்தது. அன்றுதான் றோமியோவிற்குள் இருந்த அத்தனை பெரிய ஆற்றல்களை நான் முழுமையாக இனங்கண்டு கொண்டேன். அன்றைய சண்டையில் றோமியோவும் அவனது வீரர்களும் வெளிப்படுத்திய அபாரமான வீரமும், அவர்கள் தீரமிக்க தாக்குதலும் என்றைக்குமே எம் வரலாற்றில் நிலைத்திருக்க வேண்டியவை'' என அன்றைய நினைவுகளை ராஜனின் சாவின்பின் நினைவுகூர்ந்தார் தளபதி கேணல் தீபன்.

அன்றைய வெற்றியை தமிழினம் பெருமையுடன் கொண்டாடியது. எதிரிக்கோ தன் வெற்றிச் செய்திக்குப் பதிலாய் பேரிழப்பின் கணக்குகளை மட்டும்தான் தன் எஜமானர்களுக்கு அனுப்பமுடிந்தது. இந்த வெற்றியின் பின்னால் எவருக்கும் வெளித்தெரியாது ராஜன் இருந்தான். இவையெல்லாம் ''ஓயாத அலைகள் 02'' இன் பின்னால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் துணைத்தளபதியாய் அவனை உயர்த்தியது,

வன்னிக்களத்தில் பெரும் புயலின் நடுவே நின்று எம் தமிழீழத் தாயவளின் வாழ்வை அவள் புதல்வர்களால் எப்படிக் காக்க முடிந்தது? நிச்சயமாய் உயிர் அர்ப்பணிப்புக்களால் மட்டுமே என வெறுமனே எவரும் நினைத்துவிடாதீர்கள். உயிரையே வெறுக்கவைக்கும் அந்தக் கடினமான களங்களில் உயிர்வாழ்ந்து அந்த உயிரை வைத்தே தம் வாழ்நாளின் இறுதி மணித்துளிகளிலும் உழைத்தார்களே எம் மாவீரர்கள். அவர்களின் உன்னதமான வாழ்வின் அந்த மணித்துளிகளில் தான் அந்த இரகசியத்தை நீங்கள் தேடமுடியும். எண்ணிப்பாருங்கள்! இந்தக்களத்தில் ஒரு 'செக்சன்' அணித்தலைவனாய் இருந்து ஒரு படையணியின் துணைத்தளபதி வரை உயர்ந்த ராஜன் ஒரு பொறுப்பாளன் என்றவகையில் எவ்வளவு சுமைகளை சுமந்திருப்பான்! தன் உயிரைவைத்து இரும்பையே உருகவைக்க அவன் உழைத்த உழைப்பின் மணித்துளிகளின் நீட்சி எத்தனை பெரியது. ''எம் வீரன் எமக்காய் வாழ்ந்த வாழ்வின் கதையை சொல்'' என நீங்கள் உரிமையுடன் கேட்டால் உங்களுக்கு அவனது நீண்ட பக்கங்களை உணர்வுகுலையாது பக்குவமாய் சொல்லிவிடத்தான் முடியுமா?

அவை 'ஓயாத அலைகள் - 3' இற்கு முற்பட்ட நாட்கள். வன்னிக்களத்தில் ஒரு வருடமாய் புலிகளின் மௌனத்தின் இரகசியம் புரியாது எல்லோரும் திணறிக்கொண்டிருந்த காலம். ''முதலில் பாதுகாப்புப் போர்முறையில் நிறைய அனுபவங்களை கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் போர்த்திறனை எதிரிக்கு புரியவையுங்கள். அடுத்த கட்டத்தை நான் பிறகு சொல்கிறேன் '' என்று தலைவர் அவர்கள் கூறியபோது ஒரு இளநிலைத் தளபதியாய் நின்ற ராஜன் தன் ஆளுமையையும், வீரத்தையும் மெருகேற்ற வேண்டியிருந்தது. ஏனைய தளபதிகளுடன் சேர்ந்து தன் வீரர்களின் சண்டைத்திறனை வளர்ப்பதற்காய் அவன் உழைக்க வேண்டியிருந்தது.

'ஓயாத அலைகள் - 3' இன் முழுமைப்படுத்தப்பட்ட அத்தியாயத்தில் ராஜன் தனது அழியாத தடங்களைப் பதித்தான். அதுதான் அவனை போரியலில் மேலும் வளர்த்துவிட்டது. அதுதான் ராஜனை எமது இயக்கத்திற்கும் அப்பால வெளியே அறிமுகமாக்கியது. அதிலும் சில இறுக்கமான கட்டங்களில் ராஜன் ஆற்றிய பணிகள அவனை எம் வரலாற்றில் என்றைக்குமே வாழவைக்கும் வலிமை வாய்ந்தது.

ஒட்டுசுட்டான் 'ஓயாத அலைகள் - 3 இன்' வாசற்படி அதுதான். எப்போது எம் வாழ்வை சிங்களத்திடம் தொலைத்துவிடப் போகிறோமோ என வன்னி மக்கள் ஐயுறும் அளவிற்கு எதிரி களச்சூழலை மாற்றியிருந்த காலம் அது. எங்கே, எம் போராட்டம் மீளமுடியா நெருக்கடிக்குள் போய்விடப்போகின்றதோ என எம்

**"பிரச்சனையில்லை, ஒன்றும் யோசியாதையுங்கோ, நான் பிடிச்சுத்தருவன்."**

அனுதாபிகள் எல்லாம் ஏங்கிக்கொண்டிருந்தனர். ''இயக்கம் சும்மா விட்டிட்டு இருக்காது'' என்ற எமது மக்களின் பொறுமையின் உச்ச எல்லையது. எல்லாமே அந்த வாசற்படிக்கான முகவுடைப்பின் வெற்றியில்தான் தங்கியிருந்தது. அதற்காய் ஆராய்ந்து, நிதானித்து திட்டமிட்ட தலைவர் பொருத்தமான காலத்தைத் தெரிவு செய்து அதன் பணிகளை போராளிகளிடம் ஒப்படைத்திருந்தார். அப்போது சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதியாகவிருந்தவன் லெப். கேணல் ராகவன். ''உன்னை நம்பித்தான் ஒட்டுசுட்டானுக்குள்ள இறக்கிறன்'' என்று கூறி தலைவர் அவர்கள் அவனிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தபோது, தலைவர் சொன்னதையே நினைத்துத்திரிந்த அந்தத் தளபதியின் அருகிருந்து ''பிரச்சனையில்லை அண்ண அதெல்லாம் சுகமா செய்து முடிச்சுப்போடலாம்'' என்று நம்பிக்கை வார்த்தை கூறுவான் எங்கள் ராஜன்.

சண்டைக்கு முந்தைய நிமிடங்கள். மிகப் பெரிய திட்டம் என்பதால் எல்லோருள்ளும் படபடப்பு. இறுதிநிமிடங்கள் நெருங்க நெருங்க தவறுகள் எதுவும நேர்ந்துவிடக்கூடாது என்ற தவிப்பு. நிதானத்துடன் எல்லாமே நகர்ந்தது. மற்றைய முனையில திட்டமிட்டபடியே சண்டை தொடங்கப்பட இந்த முனையில் இன்னும் சண்டை தொடங்காததால் பரப்பரப்பானது களம் நிலமையை சீர்செய்ய முன் சென்ற தளபதி ராகவன் குண்டுபட்டு வீழ்ந்துவிட்டான். ஓரளவு அணிகளைச் சீர்படுத்தியபடி எதிரி அரண்களுக்குள் மூர்க்கமாய் நுழைந்த லெப் கேணல் நியூட்டன் ஓரிரு காவலரண்களை வீழ்த்தி நிலமையை மாற்ற முயலவே அடுத்தஇடி! நியூட்டனும் குண்டுபட்டு வீழ்ந்தான். குறுகிய நேரத்தில் இரு அனுபவம் வாய்ந்த களமுதல்வர்கள் வீழ்ந்துவிட்டதால் அடுத்தகட்ட நகர்வுகள் முன் கேள்விக்குறிகள் வீழ்ந்தன. ஒட்டுசுட்டான் கரிப்பட்ட முறிப்பு — மாங்குளம் —... கனகராஜன்குளம் — புளியங்குளம் என செய்துமுடிக்கவேண்டிய பாரிய படைநகர்த்தல்கள் கேள்வியாய் விரிந்தன. பதிலாய் எழுந்து அணிகளை ஒழுங்கமைத்து வழிநடத்தத் தொடங்கினான் ராஜன். '' ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ நான் பிடிச்சுத்தருவன் '' எப்போதும் ஒலிக்கும் அந்த வார்த்தைகள் தான் இப்போதும் வேண்டும். ஆனால் இப்படியான பெரிய பொறுப்புக்களை இதுவரை சுமந்திராத ராஜனால் அதைச் செய்துமுடிக்க முடியுமா என்ற ஐயம் எல்லோருள்ளும் இருக்கவே செய்தது. அவ்விடத்தில் ராஜனைத்தவிர வேறு எவரும் இல்லை. இறுதியில், எல்லார் புருவங்களும் உயரும்படி படை நகர்த்தினான் ராஜன். வெற்றிச்செய்திகள் ஒவ்வொன்றாய் எம்மக்களை குதூகலிக்க வைக்க, எதிரிகள் தலையில் அவை பேரிடியாய் இறங்க, ராஜன் தலைவரின் திட்டங்களை செயற்படுத்தினான். அந்தக்களம்தான் ராஜனின் ஆற்றல்களைத் தலைவருக்கு இனங்காட்டியது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாய் அவனை உயர்த்தியது.

☼ ☼ ☼

ஓயாத அலைகள் -03 கட்டம் 04. பரந்தன் ஆக்கிரமிப்புத்தளம் புலிகளின் வரவை நீண்டகாலமாய் எதிர்பார்த்திருந்தது. ஒன்றன்பின் ஒன்றாய் இறுக்கமாய் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயத்துள் அது இருந்தது. ஆக்கிரமிப்பாளர்களின் போர்மூலோபாயத்தின் முதுகெலும்பாய் ஆனையிறவு இருந்ததென்றால் ஆனையிறவின் பாதுகாப்பின் முதுகெலும்பாய் பரந்தனும இருந்ததெனலாம், அத்தகையதொரு களத்தில் எதிரிக்கு சவால்விடுவதாய் பகற்பொழுதில் ஒரு சமருக்கு ஏற்பாடாகி இருந்தது. மூன்று முனைகளில் திட்டமிடப்பட்ட தாக்குதல் திட்டத்திற்கு ஒரு முனையின் தளபதியாய் ராஜன் நியமிக்கப்பட்டான். பரந்தனின் கிழக்குப்புற காவலரண் வரிசையைக் கைப்பற்றி எதிரியின் பாதுகாப்பு வியூகங்களை செயலிழக்கவைக்கும் பணி அவனுடையது. திட்டத்தின்படி எல்லாவற்றையும் அவன் திறம்படச் செய்து முடித்தான். எதிர்பார்க்கப்பட்டதைவிட ராஜன் அதிகமாகவே அங்கு சாதித்தான். அங்கு ராஜனின் இடைவிடாத உழைப்பும், தந்திரமான சில செயற்பாடுகளும் தான் எதிரியை நிலைகுலைய வைத்தன.

போராளிகளை அரவணைப்பதிலும், அவர்களின தேவைகளைக் கவனிப்பதிலும் ராஜன் அதீத அக்கறை செலுத்துபவன். அவர்களின் அன்னையாய், தந்தையாய்..... என எல்லாமாயும் அவன் இருப்பான. சண்டைக்களம் பரபரப்புடன இருக்க, அடுத்தகட்ட ஏற்பாடுகளில் எல்லோரும் தீவிரமாய் ஈடுபட்டிருக்க, ஓய்வற்ற வேலைகள் நடுவேயும் களைத்திருக்கும் தன் போராளிகளுக்காய் சோடாவும், உலருணவும் கேட்டு தளபதிகளுடன் சண்டை பிடித்துக்கொண்டிருப்பான் ராஜன். தொடர்சண்டைகள நடந்துகொண்டிருக்க ராஜனின் கட்டளை அரணில் போராளிகளுக்கு அனுப்புவதற்காய் ஏதாவது கறியும் தயாராகிக்கொண்டிருக்கும். இப்படித்தான் எல்லாவிடயங்களிலும் ராஜன் தன் போராளிகளைக் கவனித்தான். ராஜனின் இத்தகைய இயல்பே ஒருமுறை தலைவரின் முன்னால் அவனை கூச்சத்தோடு தடுமாறவைத்த காட்சி இப்போதும் கண்டவர் கணகளின்முன் அழியாது தெரிகிறது. நடந்தது இதுதான்;

கண்டிவீதி - இத்தாவில் போர்க்களத்தில் சண்டைகளுக்கு ஓய்வே இருக்காது. தொடர் சண்டைகளால் சோர்ந்துபோகும் உடலைவைத்து போரிடுவதற்கு போராளிகளுக்கு அதிக மனவுறுதி தேவைப்படும். அத்தகையதொரு களத்திலும் போராளிகளை உற்சாகமாய் வைத்திருந்தான் ராஜன். அங்கு நடக்கும் கடுமையான சண்டைகள் சற்றுத் தணிந்துவிட்டால் ராஜன் ஆட்டுக்கறிக்கு தயார்பண்ணத் தொடங்கிவிடுவான. போர்க்களமும கறிக்களமும் ஒன்றாகவே அங்கு நடக்கும். அந்தக் களமுனையின் ஒரு பகுதியில் கட்டாக்காலி ஆடுகள் திரிவது வழக்கம். அந்தக் களப்பகுதியில் உள்ள போராளிகளுக்கு ராஜன் வோக்கியில் அறிவிப்பான். ''இஞ்ச கொஞ்சம் தணிஞ்சுபோய் இருக்கு. வகுப்பெடுக்கலாம் போலகிடக்கு, நிண்டால்

→



www.eelamview.com

www.eelamview.com



ஒரு மாஸ்ரரை அனுப்புங்கோ.'' மாஸ்ரர் என்பது ஆட்டுக்கிடாய் என்று அவர்களுக்கு மட்டும்புரியும். அது அவர்களுக்கிடையிலான மொழி. கிடாய் ஆடு - அதுதான், மாஸ்ரர் ராஜனிடம் போவார். கறியும் களமும் ஒன்றாய் நடக்கும். அவனது கட்டளை போலவே ஒவ்வொரு காவலரணுக்கும் கறியும் போகும் ஒருமுறை சண்டை தணிந்திருப்பதாகவும் மாஸ்ரரை வகுப்பெடுக்க அனுப்புமாறும் ராஜன் அறிவித்தபோது பதில் வந்தது, ''இஞ்ச மாஸ்ரர் ஒருத்தரும் இல்ல, வகுப்ப இண்டைக்கு கைவிடுங்கோ''
''ஒரு மாஸ்ரரும் இல்லையோ''
''மாஸ்ரர் இல்ல ரீச்சர் நிக்கிறா, அனுப்பவோ'' ராஜனுக்கு புரிந்துவிட்டது ரீச்சரெண்டு அவங்கள் மறியாட்டைச் சொல்லுறாங்களெண்டு. ''ஓ ஓ - ஓ ரீச்சரெண்டாலும் பறவாயில்லை வகுப்பெடுத்தாச் சரி.''
இந்த 'ரீச்சர் பகிடி' இயக்கத்தில் பரவலாக எல்லா இடமும் பரவத் தொடங்கியது. சண்டை முடிந்து அடுத்த சண்டைக்குப் புறப்பட இருந்த நேரம். போராளிகளைச் சந்திப்பதற்காக தலைவர் வந்திருந்தார். அவர் புறப்படும் போது ''தம்பியாக்கள் இனிச் சனங்களின்ர இடங்களுக்குள்ள போகப்போறியள் அங்க சனங்கள் எதிலயும் கைவைக்கப்போடக்கூடாது. ஆடு, மாடு, கோழி ளைத்தான் சொல்லுறன்'' என்றுவிட்டு அருகிருந்த ராஜனைப் பார்த்து பெரிதாகச் சிரித்தபோது கூச்சப்பட்டு அந்தரப்பட்டுச் சிரித்தான் அவன் எல்லோருக்கும் அவனைப் பார்க்கச் சிரிப்பு வந்தது. எல்லாம் முடிந்து வந்தபின்னர் அவன் சொன்னான் ''நாங்கள் எங்கட பிரச்சனையை மட்டும் பாக்கிறம், பாவம் அண்ணை எவ்வளவு பிரச்சனையளைப் பார்க்கவேணும்.''

கட்டளை இடுவதிலும், ராஜனுக்கென்றொரு தனித்துவமான பாணி இருந்தது. எந்தவொரு கட்டங்களிலும் பதட்டமடையாத அவனது கட்டளைகளிலும் அரவணைப்பு இருக்கும்; அதில் கண்டிப்பு, ஆலோசனை, நம்பிக்கை, உற்சாகம் என எல்லாமே கலந்திருக்கும், அவனது அன்பான வார்த்தைகளிற்கு இருந்த அத்தனை பெரிய ஆளுமை அவனுக்கே தனித்துவமானது. இப்படியே நீண்டுசெல்லும் ராஜனின் ஆளுமையை அவனது போர் வாழ்வின் கதையை இங்கு முழுமையாய் எழுதி முடிப்பது அவ்வளவு இலகுவானதல்ல. அதனால் அவனது இறுதி வெற்றி அத்தியாயத்தை நினைத்துப்பார்க்கிறேன்.

ஆனையிறவை வீழ்த்துவதற்கான இறுதிக்கட்டம். உலக போரியல் வரலாற்றில் முக்கிய பதிவாய் தலைவர் பிரபாகரன் நிகழ்த்திய விந்தைமிகு படைநகர்த்தல். அந்த இத்தாவில் போர்க்களத்தில் தான் ராஜனின் குரல் அதிகமாய் ஒலித்தது. அங்குதான் அவனது பெயர் அதிகமாய் பேசப்பட்டது, அங்கிருந்த ஒவ்வொரு தொலைத்தொடர்பு சாதனங்களும் றோமியோ என்ற அவனது சங்கேதப் பெயரையே அதிகமாய் உச்சரித்தும், கேட்டும் இருக்கும். புலிகள் இயக்கம் நிகழ்த்திய அந்த வரலாற்றுச் சாதனைக் களத்தில் ராஜன் பங்கெடுத்த ஒவ்வொரு சண்டைகளுமே அவனை எம் வரலாற்றில் உயர்த்தியது. ஆனையிறவை வீழ்த்தும் எம் தலைவரின் போர்த்திட்டத்தின் அத்திவாரத்தை அசையாது காத்த அந்த வெற்றிகளின் பின்னால் ராஜனின் உழைப்பு எத்தகையது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்களா?

கண்டிவீதியூடே பயணித்து பளை கடந்து இத்தாவிலிற்குள் பிரவேசியுங்கள். நிலமெல்லாம் கிளறி எறியப்பட்டு, மரங்களெல்லாம் குதறப்பட்டு அங்கு சுடுகாடாய் கிடக்கும் ஒரு சிறிய நிலப்பரப்பு. அந்த வீதியிலிருந்து வலப்புறமாய் சிலநூறு மீற்றர் தொலைவிலிருக்கும் அந்த உருக்குலைந்த சிறிய வளவுதான் ராஜனின் கட்டளை மையம். அதை எதிரி எறிகணைகளால் உழுப்பியெடுத்த ஒவ்வொரு தடவையும் அதற்குள் இருந்துதான் ராஜன் சிரித்தபடி படைநடத்தினான். உறுதியாய், நிதானமாய், முடிவெடுக்கமுடியாது மனித மூளையை கலக்கிவைக்கும்படி எதிரியால் மாற்றப்பட்டிருந்த அந்த நரகலோகத்திலிருந்து ராஜன் என்ற அந்தத் தளபதியால் எப்படிச் செயற்பட முடிந்தது? தன் கறுத்தமேனி கருகிக் கறுவலாய் மாற, மெலிந்த அவன் உருவம் வாடி வற்றிப்போக அந்தக் களத்தில் அவன் செய்தவை கதைகளல்ல காவியங்கள்.

மார்ச் 27, இத்தாவிலிற்குள் புலிகள் புகுந்த சில மணித்தியாலங்களில் விடிந்துவிட்ட அன்றைய காலைப்பொழுது. புலிகள் உறுதியாக நிலைகொண்டிருக்க முடியாது என எண்ணிய பகைவன் அவசர அவசரமாய் சண்டையை தொடக்கினான். பலப்படுத்தப்படாத அரண்களிலிருந்தே போராளிகள் சண்டையிடவேண்டியிருந்தது. எதிரியின் கையே களத்தில் மேலோங்கியிருந்தது. களத்தின் மையத்தில் நின்று எல்லாவற்றையும் செய்விக்க வேண்டியவன் ராஜன். எறிகணை மழை நடுவே அவனது பாதுகாப்பிற்கென இருந்தது சிறியதானதொரு தண்ணீர்த்தொட்டிதான். ராஜனின் கட்டளை அலைவரிசைகள் மூலம் அவன் இருக்கக்கூடிய இடத்தைக் கணிப்பிட்டு எறிகணைகளை எதிரி பொழிந்து கொண்டிருந்தான். அவனைக் குறிவைத்த எறிகணைகளும், ரவைகளும் தோற்றுப்போக ராஜன் வெற்றிகரமாய் எல்லாவற்றையும் செய்துமுடித்தான்.

மூன்று தினங்களில் மற்றுமொரு படையெடுப்பு. அன்றும் எதிரிக்கே சாதகமாக மாறியிருந்தது களநிலை. உச்சகட்ட சண்டையை நடத்திக்கொண்டிருந்தான் ராஜன். முன்னணியில் நின்ற அணித்தலைவர்களின் தொடர்புகள் அறுந்துபோக எதிரி மூன்று திசைகளாலும் சூழத்தொடங்கினான். ராஜனின் சுமை அன்றைய களத்தில் அதிகரித்துக்கொண்டே போனது. திடீரென ஒருகடவை அவனது கட்டளை அரண் அதிர்ந்து குலுங்க அதன் வாசலில் வீழ்ந்து வெடித்தது எறிகணை. அதன் அதிர்வு எல்லோரையும் உலுப்பிவிட கந்தக நெடியும், புகையும் அரணை மூடிக்கொண்டது. அப்போதும் ராஜனின் கட்டளையிடும் குரல் ஒலித்துக்கொண்டுதான் இருந்தது. அங்கிருந்த தோழன் தன் உடையால் விசுக்கி, விசுக்கி புகையை விலக்க முனைந்துகொண்டிருக்க நிலைகுலையாது தொடர்ந்தும் சண்டையை நடத்திக்கொண்டிருந்தான் ராஜன், அன்றைய வெற்றியால் ஆனந்தமடைந்த மண்மாதா தன் புதல்வன் ராஜனின் போராற்றலை எண்ணி பெருமிதமடைந்திருப்பாள். ஆனால் ராஜனின் உருவம் மட்டும் காய்ந்து, மெலிந்து.....

ஏப்ரல் 02ம் நாள். இருநாள் இடைவெளிக்குள்ளேயே அடுத்த பாரிய படையெடுப்பு. 'வெலிகதர' என பெயரிட்டிருந்தான் எதிரி. இம்முறை ராஜனின் பகுதியை விடுத்து வேறொரு பகுதியில் சண்டை மூண்டிருந்தது- உள்ளிருந்த எமது அணிகளை முழுமையாய் முற்றுகையிட்டு '' புலிகளின் தளபதி பால்ராஜ்சும் அவர் தோழர்களும் உயிருடன் பிடிபடப்போகிறார்களா? அல்லது அழியப்போகிறார்களா? '' என சிங்களத்தலைமை ஆவலுடன் பார்த்திருக்குமளவிற்கு கடுமையான சண்டையது. முறியடிப்பில் உறுதிகொண்டு தளபதி பால்ராஜ் நடத்திய புலிகளின் வீரமசெறிந்த சண்டை அது. மறுமுனையில நின்ற ராஜன் தளபதி பால்ராஜ்சால் சண்டைமுனைக்கு அழைக்கப்பட்டான்; அந்தக்களமெங்கும் எதிரி அமைத்த எறிகணை வேலிகளைக் கடந்து, பேஜர் றோயின் அணியுடன் ஓடோடிச்சென்று, அன்றைய புகழ்பூத்த முறியடிப்பை ஏனையவர்களுடன் இணைந்து செய்துமுடித்தான் எங்கள் ராஜன். அன்றும் தமிழர்சேனை வெற்றிக்கொடி நாட்டியது. ஆனால் ராஜனின் உருவம் மட்டும்...

ஓயாத அலைகள் 03 இல் ஆனையிறவிற்கான சண்டைகள் முடிந்து இத்காவிலில் நின்ற ராஜனுடன் கைகுலுக்கச் சென்ற அவன் தோழர்கள் கண்டது பழைய ராஜனை அல்ல, ஆனையிறவின் வெற்றிக்காய் எம் போராளிகள் வாழ்ந்த கடின வாழ்வை பிரதிபலித்த புதிய ராஜனைத்தான். வாடிவதங்கிய அந்த முகத்திற்கூட எவரையும் வசீகரிக்கும் அவனுக்கே உரிய கவர்ச்சி மட்டும் அப்படியே இருந்தது நாங்கள் எப்போதும் அவனுடன் கூடவே காணும் அந்த அழகான சிரிப்புங்கூட அப்படியேதான் இருந்தது. காய்ந்து வரண்ட அவனின் தொண்டையிலிருந்து வந்த கரகரத்த குரலிலும் எப்போதும் இருக்கும் குழைவுபட்டும் மாறாமலிருந்தது. பெரும் சாதனையை செய்து முடித்து தளம் வந்தவன் தலைவரைச் சந்தித்தான். தன் வீரர்கள் சாதித்தவற்றை அவருக்குத் தெரியப்படுத்தினான். தலைவருடன் தன் போராளிகளைச் சந்திக்க வைத்தான்.

ராஜனை மீண்டும் களம் அழைத்தது. அது ஓயாத அலைகள் மூன்றின் இறுதிக்கட்டம். தளபதி கேணல் சொர்ணத்திற்கு துணையாய் நின்ற தளபதிகளில் ஒருவனாக தன் பணிகளை தனக்கேயுரிய இயல்பான திறமைகள் மூலம் செய்து முடித்தான் அங்கு சண்டைகள் முடிந்தும் அடுத்த கட்ட சண்டைகளுக்கான பயிற்சிக்காக ராஜனும், அவனது போராளிகளும் தலைவரால் அழைக்கப்பட்டனர்.

ராஜனின் சண்டைப்பட்டியல் நீண்டுகொண்டே போனது. உயிர்ப்பசிகொண்ட யுத்தகளங்களிற்குள்ளே தான் எங்கள் ராஜன் நிதமும் வாழ்ந்தான். ஆயினுமகூட அந்தக் களங்களில் ராஜனுக்கென்றொரு சாவு இருக்குமென நாங்கள் நம்ப முயலவில்லை. அந்தளவிற்கு அவனது துணிவிலும், தந்திரத்திலும், துடிதுடிப்பிலும் நாங்கள் அத்தனை பெரிய நம்பிக்கை கொண்டிருந்தோம். ஏனெனில் ராஜனால் உயிருடன் திரும்ப முடியுமா? என நாங்கள் ஐயுற்ற எத்தனையோ களங்களில் இருந்து அவன் மீண்டுவந்தது வெறும் அதிஸ்டத்தால் அல்லவே! 1993இல் புலோப்பளைச்சமரிலும், பின்னர் 'ஜயசிக்குறுய்' எதிர் நடவடிக்கையிலுமகூட அவனுக்கு நேராய் வந்த ரவைகளால் அவனது கால்களிலும், இடுப்பிலுமாக வெறும் தசைகளையும், எலும்புகளையும் மட்டுமே துளைத்துச்செல்ல முடிந்தது. 1997 ஆனையிறவு, பரந்தன் சமரின்போதுகூட ராஜனுக்கு நேராய் வந்த ரவையால் அவனது மண்டையை வெறுமனே துளைத்துச் செல்லத்தான் முடிந்தது. நிச்சயமாய் இவற்றிலெல்லாம் ராஜன் உயிர்தப்பியது அதிஸ்டத்தால் மட்டுமல்ல. அவனிடம் இருந்த துணிவாலும், நம்பிக்கையாலும்தான்.

எங்கள் தளபதி இன்னும் களங்கள் காணுவான். வளர்ந்து, முதிர்ந்து அனுபவமிக்கதொரு முதிர்ந்த தளபதியாக அவன் எம் தலைவரின் சுமைகளை இன்னும் இன்னும் பகிர்ந்துகொள்வான் என நாங்கள் எல்லாம் எண்ணியிருந்தோம். யூன் மாதம் 26ம் திகதி, மறுநாள் தன் வீரர்களுடன் களமுனை ஒன்றிற்கு புறப்பட இருப்பதாய் ராஜன் சொல்லியிருந்தான். அதற்கு முன் தன் தோழர்களோடு குளிப்பதற்காக இரணைமடு சென்றிருந்தான். திடீரென அன்று மாலை எல்லோரையும் விறைக்க வைத்த அந்தச் செய்தி பரவியது. ''ராஜனுக்கு சாவு '' அந்தப் பெரு வீரனின் சாவுமட்டும் வெறுமையாய் நின்றது: சாவுக்குள் வாழ்ந்தவனிடம் தோற்றுப்போன சாவு தண்ணீருக்குள் ஒளித்துக்கொண்டது. தமிழீழப் போர்க்களங்களில் அதிகம் பேசப்பட்ட எங்கள் வீரனுக்கு சாவில் மட்டும் அங்கு இடமில்லாமல்போனது. ''றோமியோ சண்டையில செத்திருந்தாலும் மனம் ஆறுதலாக இருந்திருக்கும்'' அவனை அறிந்த போராளிகள் எல்லோரும் அதையேதான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில் அதை ஜீரணித்துக்கொள்ள முடியாமலிருக்கிறது எங்களால். ○

'' ராஜனுக்கு சாவு..... '' அந்தப் பெரு வீரனின் சாவுமட்டும் வெறுமையாய் நின்றது: சாவுக்குள் வாழ்ந்தவனிடம் தோற்றுப்போன சாவு தண்ணீருக்குள் ஒளித்துக்கொண்டது. தமிழீழப் போர்க்களங்களில் அதிகம் பேசப்பட்ட எங்கள் வீரனுக்கு சாவில் மட்டும் அங்கு இடமில்லாமல் போனது. '' றோமியோ சண்டையில் செத்திருந்தாலும் மனம் ஆறுதலாக இருந்திருக்கும் '' அவனை அறிந்த போராளிகள் எல்லோரும் அதையேதான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.



www.eelamview.com

www.eelamview.com



புலிகள் இயக்கத்திற்கு இராணுவத்திட்டம் - தமிழ்மக்களுக்கு அரசியல் திட்டம் என்பது அம்மையார் அரசாங்கத்தின் புகழ்பூத்த கொள்கைவகுப்பு.

பேச்சளவில் இதற்கு வெளிப்படையான விளக்கம் கொடுக்கப்பட்டாலும் நடைமுறையில் இது நயவஞ்சகமான செயற்பாட்டு வடிவத்தைக்கொண்டது.

புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒட்டுமொத்தத் தீர்வாக இராணுவத்திட்டம்.

அதேவேளை, அரசியல்தீர்வு என்பது தமிழ்மக்களுக்கு அல்ல, மாறாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே தீர்வுத்திட்டம் என்ற அரசியல் நாடகம். இதுவே அம்மையார் அரசாங்கத்தின் யதார்த்தமான செயற்பாடாகவிருந்து வருகிறது

புலிகளுடன் அரசு பேசவேண்டும் - தாம் அரசமைத்தால் புலிகளுடன்பேசி அரசியல்தீர்வு காணுவோம் என்றெல்லாம் மேடைகளில் முழக்கியும் - பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டும் அரசியல் செய்த ஐ. தே. கட்சி, இப்போது, நாட்டின் எரியும் பிரச்சனையாக இனப்பிரச்சனையல்ல வேறு சிக்கல்களே இருக்கின்றன என எடுத்துக்காட்டுகின்றது

தேர்தல் ஆணையத்தில் - சிங்கள காவல்துறையில் - அரசநிருவாக இயந்திரத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதே ஐ. தே. கட்சியின் இப்போதைய நிபந்தனைகளாகும். இவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அரசாங்கத்தைக் கவிழ்க்க முயல்வோம் என அது மிரட்டி உள்ளது. இதன்மூலம் போர்தொடர்வதில் ஆட்சேபணை இல்லை என்ற செய்தியையே ஐ. தே. கட்சி அம்மையாரின் அரசாங்கத்திற்கு உணர்த்தியுள்ளது.



# பேரினவாதிகள் கைகோர்க்கின்றனர் — சிங்களதேசத்தின் புதியஅரசியல் சூழல்

இம்முறை நடந்த சிறிலங்கா பாராளுமன்ற தேர்தலுக்கான பரப்புரையின் போதும் இதேபோன்ற இரட்டைத்தன்மைகொண்ட அணுகுமுறையே காணப்பட்டது.

இனப்பிரச்சனைக்கு அமைதி வழியில் அரசியல்தீர்வு என தேர்தல் விஞ்ஞாபனத்தில் - எழுத்துவடிவில் - பிரகடனப்படுத்திவிட்டு, போர்மூலம் இனப்பிரச்சனையைத்தீர்க்க ஆணைதருமாறு, அம்மையாரின் கட்சி பகிரங்கப் பரப்புரை செய்திருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் இந்த இரட்டைத்தன்மைப் பரப்புரை பற்றி ஐலண்ட் ஆங்கிலப்பத்திரிகை (23. 08 2000) கிண்டலாக ஆசிரியர் தலையங்கம் வரைந்திருந்தது.

தேர்தல் முடிவில் பொ. ஐ. முன்னணி ஒரு தொங்கு நாடாளுமன்றை அமைத்தது

இந்த தொங்கு நாடாளுமன்ற அரசாங்கத்தில் தமிழ் - முஸ்லீம் மக்களின் அரசியல் ஆதிக்கம் மேன்நிலையில் இருக்கவாய்ப்புண்டு என்ற காரணத்தால் அம்மையார் அவர்கள், தனது அரசியல் எதிரி ளான ஐ. தே. கட்சியினருடன் ஒரு அரசியல் சமரசம் செய்யுமளவிற்குச் சென்றுள்ளார்.

இலங்கைத்தீவின் இன்றைய தலையாய பிரச்சனை தமிழ் - சிங்கள மக்கள் மத்தியிலான தேசியஇனமுரண்பாடும் அதன் வெளிப்பாடான தீவிரப்போரும்தான்.

இந்த உண்மையை சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் தத்தமது தேர்தல் பிரகடனங்களில் ஒப்புக்கொண்டு இனப்பிரச்சனையைத் தீர்க்க அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தன.

ஆனால், செயலளவில் அரசியல்தீர்வுபற்றி இரண்டு பிரதான கட்சிகளும் எதுவித அக்கறையும் காட்டவில்லை.

போரைத்தொடரும் அரசின் திட்டத்திற்கு தமிழ் - முஸ்லீம் கட்சிகள் இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காக எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சியைச் சேர்ந்த ஒருவரை புதிய நாடாளுமன்றின் சபாநாயகராக நியமிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி இணங்கியது. இதன்மூலம் எதிர்க்கட்சிக்கொரு சமாதானச் சமிக்கையை சந்திரிகா அம்மையார் அனுப்பியுள்ளார். அதை ஐ. தே கட்சியும் பற்றிப்பிடித்துள்ளது.

தமிழர்களைக்கொல்ல வேண்டும் - வட - கிழக்கை பறித்தெடுக்கவேண்டும் அதற்காக இறுதிவரை போரை உறுதியாக நடத்தவேண்டும் என்று பகிரங்கமாகப் பேசிவந்த சிங்கள உறுமய கட்சியும் புதிய நாடாளுமன்றில் இடம் பிடித்துவிட்டது.

போரை ஆதரிக்கும் ஜே. வி. பியும் கணிசமான ஆசனங்களைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக சிம்மாசனம் ஏறியுள்ளது.

தமிழினத்திற்கெதிரான போரை இடைஞ்சலின்றித் தொடர்வதற்கு ஏதுவாக பிரதான சிங்களக் கட்சிகளை - அமைப்புகளை ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவழைப்பதில் பௌத்தமதபீடம் நடுவராகவும் - தூதராகவும் செயற்படுகின்றது. அதில் சில வெற்றிகளையும் பெற்றுள்ளது.

இந்தச் சூழலைப்பயன்படுத்தும் நோக்கில் படைக்கு ஆட்திரட்ட பௌத்த பிக்குமார் உதவவேண்டும் என்று சிங்கள இராணுவத்தளபதி விடுத்த வேண்டுகோளும் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒருசில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டிலிருந்து படைவிலக்கலைப் பற்றிச் சிந்தித்த அரசாங்கம் இப்போது ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி மேலும் நில ஆக்கிரமிப்பை நடாத்த ஆசைகொண்டுள்ளது.

பேரினவாதசக்திகள் 'போர்' என்ற பொதுவேலைத்திட்டத்தில் தமது கருத்துப்பேதங்களை மறந்து - இணையமுயலும் அரசியல்சூழல் சிங்கள இராணுவ பீடத்தையும் உற்சாகப்படுத்தியுள்ளது.

போரில் சிங்களப்படைகள் முன்னேற்றத்தைக்காட்ட முடியாவிட்டாலும் - போரைத்தொடரவேண்டும் என்ற பேரினவாதச் சித்தாந்தத்தை படையினர்மீது திணித்துவிடுவதில் அரசாங்கமும் - எதிர்க்கட்சியும் தீவிரமாக ஈடுபடுகின்றன.

ஆனையிறவுத் தோல்வியால் படையினர்க்கு ஏற்பட்ட பதட்டத்தைத் தணிக்கும் எண்ணத்துடன் 2400 கோடிரூபா செலவில் புதிய ஆயுதங்களை அரசாங்கம் கொள்வனவு செய்திருந்தது. இதற்காக மேலும் 3400 கோடிரூபாய்களைச் செலவிட அரசாங்கம் தயாராகவுள்ளது என புதிய பிரதமரும் அறிவிப்புச் செய்துள்ளார்.

தமிழினத்திற்கெதிரான போரை இடைஞ்சலின்றித் தொடர்வதற்கு ஏதுவாக பிரதான சிங்களக் கட்சிகளை - அமைப்புகளை ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவழைப்பதில் பௌத்தமதபீடம் நடுவராகவும் - தூதராகவும் செயற்படுகின்றது. அதில் சில வெற்றிகளையும் பெற்றுள்ளது.

புதிய அரசாங்கம் பதவியேற்ற கையோடு நோர்வே சென்றிருந்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் நோர்வே பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் " புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் குறைவு " என மத்தியத்துவம் செய்யவந்த நாட்டிலேயே கருத்துக்கூறியுள்ளார்.

போருக்காக சிங்கள அரசாங்கம் பெருமெடுப்பில் இராணுவ அரசியல் தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுவருகின்றது என்பது கண்கூடு.

அரசு, முன்னெப்போதையும்விட எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் அந்தப் போரையும்- போருக்கான அரசியலையும் நடாத்தப்போகின்றது என்பது முக்கிய விடயம்.

ஆனையிறவைக் கைப்பற்றி, புலிகள் குடாநாட்டு நிலப்பரப்பில் கால்பதித்து -

எல்லாளன்

படையினரை மேலும் பலாலிநோக்கி நெருக்கமுயலும் இராணுவ யதார்த்தத்தையும்- அதன் அபாயங்களையும் சிங்களஅரசு மிகக் தெளிவாக புரிந்துவைத்திருக்கின்றது,

இந்தக் களயதார்த்தத்தெளிவுதான் பேரினவாதிகளை கைகோர்க்கத் தூண்டியுள்ளது.

சிங்களத்தைப் பொறுத்தவகையில் இது அவர்களுடைய இறுதிமுயற்சி.

வெல்வது அல்லது புலிகளின் வெற்றியை ஏற்றுக்கொள்வது என்ற நிலையிலேயே சிங்கள இராணுவபீடம் இன்றுள்ளது.

பல்குழல் மோட்டார்களை - மிக் 27 விமானங்களைத் தீவிரமான வகையில் பயன்படுத்தியும் குடாநாட்டு இராணுவச் சமநிலையில் எந்தவித மாற்றங்களையும் படையினரால் செய்யமுடியவில்லை. "புலிகளின் வேகநகர்வை புதிய ஆயுதங்கள் கட்டுப்படுத்தியுள்ளன! அவ்வளவுதான்" என சிங்கள இராணுவ ஆய்வாளர்களே விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் பேரினவாதிகளின் இணைவும் - புதியவகை ஆயுதக் கொள்வனவுகளும் சிங்கள தேசத்திற்குச் சார்பாக போரில் திருப்பு முனைகளை ஏற்படுத்தப்போவதில்லை.


மாறாக தமிழரின் தரப்பில் பாரிய விழிப்புணர்வு ஏற்பட்டு - போராடுவோரின் எண்ணிக்கை அதிகளவில் அதிகரிக்குமாகவிருந்தால் தமிழினத்திற்குச் சார்பாக போரில் பிரளயங்கள் ஏற்படும். அது தமிழருக்கு விடுதலையை விரைவாகப் பெற்றுத்தரும். ○



www.eelamview.com

www.eelamview.com






# "அரசியல் நயவஞ்சகம்"

## THE POLITICS OF DUPLICITY

### நூல் விமர்சனம்

**- க. வே. பாலகுமாரன்**

உண்மை உலகை பாதிதூரம் வலம்வர முன்னர் பொய்மை உலகை பலமுறை சுற்றிவந்து விடும என்பார்கள். இதுபோலத்தான் 1995 ஏப்பிரலின் பின் நடைபெற்றது புலிகளுக்கும் சந்திரிகா அம்மையாரின் அரசாங்கத்திற்கு மிடையே நடைபெற்ற பேச்சுக்கள முறிவடைந்தபோது, அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதியது போலவே புலிகள் தமதுபக்க நியாயத்தை உலக அரங்கின் முன்வைக்க முன்னரே ஒருதலைப்பட்சமாக உலகம் தனது தீர்ப்பை வழங்கிவிட்டது. ஆனால் இப்போது உண்மை உலகை வலம் வரத்தொடங்கிவிட்டது. 1995-2000ம ஆண்டிற்கு இடைப்பட்ட காலம் சற்று நீண்டதுதான் ஆயினும் காலம் தாழ்த்தினாலும் மிக காலப்பொருத்தமாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட "நயவஞ்சக அரசியல்" (The politics of Duplicity) வெளிவந்துள்ளது. தனது உடல்நலக் குறைவிற்கு மருத்துவம் பார்க்கச் சென்றவர் அம்மையாருக்கு இப்போது அதிர்ச்சி மருத்துவம் பார்த்திருக்கின்றார். தங்கள் தரப்பின நியாயங்கள் உலக அரங்கு ஏறவில்லையே என்கிற எம்மக்களின் பெருத்த மனக்குறை நீக்கும் வகையில் இராசதந்திர உலகின் வல்லுநர்களுக்கும் எம் மக்களின்பால் நேயப்கொண்டவர்க்கும் விளக்கும் வகையில் இலகு இராசதந்திர மொழியில் நூல் ஆக்கப்பட்டுள்ளது. தனக்கேயுரிய இயல்பான அமைதியான ஆனால் அழுத்தம் திருத்தமான ஆணித்தரமான நடையில பாலசிங்கம் அவர்களால் நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் வெளிவந்த காலப்பொருத்தம் தான என்ன? 1995 ஏப்பிரல் பேச்சுக்கள் முறிவடைந்தன; ஆறாண்டுகளாக பெரும் போர் தொடர்கின்றது இப்போதே சருவதேசத்தின் சார்பில் நோரவே மீண்டும பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சிகளைத் தொடர்கின்றது. ஆகவே அன்று ஏன் பேச்சுக்கள் முறிவடைந்தன? இவை தொடர்பில் புலிகளின் உளப்பாடு என்ன? இவற்றினை உலகிற்கு உரைப்பதற்கு 'பாலா அண்ணை' என உள்ளன்புடன் தலைவராலும், போராளிகளாலும், மக்களாலும் அழைக்கப்படும் அன்ரன் பாலசிங்கமே மிகக பொருத்தமானவரல்லவா? அன்றைய பேச்சுக்களிலும் இன்றைய பேச்சுக்களிலும நேரடித்தொடர்புபடுகின்றவராகவும் தலைவரின மனநிலையை உணர்ந்தவராகவும் அவரே இருக்கின்றார். இந்நூலின் வெளியீடு பிரதிபலிக்கும் இன்னொரு அரசியல் பெறுமானமொன்றையும் இங்கே பதிவாக்க விரும்புகின்றோம். 1995 ஏப்பிரலின் பின் இடைவிட்டு ஆனால் இடைவிடாமல் அம்மையார் என்ன பிரகடனம் செய்து வந்தார்? புலிகளை நோக்கி சவால் அல்லவா விடுத்தார்? உலகத்திற்கு உறுதிமொழியல்லவா கொடுத்தார்? புலிகளே பேச்சுக்களை குழப்பினர்; முன்னறிவித்தலின்றி திடீரென போரைத் தொடங்கினர்; இவற்றினை நிரூபிக்க தக்க சான்றுகளாக எனக்கும் பிரபாகரனுக்குமிடையிலான கடிதங்கள் உள்ளன; இவற்றினை வெளியிட்டால் புலிகள் மூச்சுப் பேச்சற்று மூலைக்குள் முடங்க வேண்டியதுதான்; மிக விரைவில் கடிதங்களை வெளியிடுவேன்" என வீராப்பாக கதைவசனம் பேசி நாடகமாடி வந்தார். இதற்கு அவர் துணைசேர்ந்த 'புரொன்ட்லைன்' ராம் எனப்படும் ஒரு பத்திரிகையாளனுக்குரிய நியாய எல்லைகளைக் கடந்து தனது மார்க்சிய அறிவையே ஒரு இனத்தின் விடுதலைக்கெதிராக பயன்படுத்தும் "இன்னொரு இரட்டைவேட மலின அறிவுவாதி ஆவார்." அம்மையாரின் இமாலயப் புளுகுகளுக்கு உண்மைப்பூச்சு பூசும் வேலை இவருக்கு. இப்போது கடிதங்கள் வெளியிடப்பட்டுவிட்டன. ஆனால் எவராலும் தக்க நேரத்தில் தவிர்க்க முடியாத, முகத்திலறையும் உண்மையாக இந்நூல் வெளியாகி உலகில் உலவுகின்றது. மீண்டும் தனது பழைய உளுத்துப் போன வாதத்தினை முன்வைக்கும் வாய்ப்பினை, பாலா அண்ணை இப்போது அம்மையாரிடம் இல்லாது செய்துவிட்டார். இதனால் பெருத்த மனநிம்மதியை எம்மக்கள் அடைகின்றார்கள்.

முன்னுரையாக வரும் அறிமுகவுரை, முடிவுரையாக வரும் பேச்சுக்கள் தோல்வியடைந்தமை தொடர்பான பிரதிபலிப்புக்கள் தவிர ஐந்து அத்தியாயங்களாக நூல் வகுக்கப்பட்டுள்ளது. 1994ம் ஆண்டு செப்டெம்பர் தொட்டு 1995 ஏப்பிரல் வரையான காலப்பகுதி இவ்வைந்து அத்தியாயத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. முழுநூலின் உள்ளடக்கமுமே மிகச் சுருக்கமாக அறிமுகவுரையில் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. பாலா அண்ணையின் அனுபவ முதிர்ச்சியின் ஆற்றல்மிகு சொற்றொடர்களை அரசியல் வரைவிலக்கணங்களின் பல கீற்றுக்களை இப்பகுதியில் மட்டுமல்ல நூலெங்கும் நாம் காணமுடியும். தமிழ்மக்கள் தொடர்பில் மட்டுமல்ல சிங்களதேசத்தை, சருவதேசத்தை அணுகிய முறையாலும் அம்மையாரின் இரட்டைவேடப் போக்கினை வெகு பொருத்தமாக 'நயவஞ்சக அரசியல்' எனும் தொடருக்குள் பொதித்தவர், எம்மக்கள் தொடர்பான அவரது நயவஞ்சக அரசியலை. "Peace trap for a Longterm war" நீண்டகாலப் போருக்கான அமைதிப்பொறி என வருணிக்கின்றார். அறிமுகவுரை யதார்த்தமான கணிப்போடு ஆரம்பமாகின்றது. "ஏப்பிரல் 1995ம் ஆண்டில் பேச்சுக்கள் முறிவடைந்தபோது சருவதேச சமூகம் எவ்வித தயக்கமுமின்றி புலிகளே பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கு காரணம் என கண்டனம் தெரிவித்தது. புலிகள் தமது தரப்பு வாதத்தினை முன்வைக்க முன்னரே உலகம் தீர்ப்பை வழங்கிவிட்டது. சருவதேச தொடர்புசாதன ஊடகங்களோடு முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு தனிமைப்பட்டிருந்த புலிகளால் தமது தரப்பு நியாயத்தை உடன் முன்வைக்க முடியவில்லை. எனவே சிறிலங்கா அரசு தான் மேற்கொண்ட பாரிய சருவதேச பொய்மைப் பரப்புரையால் வெற்றியீட்டி உலகை தன்பக்கமாக்கிக் கொண்டது."

யாழ்ப்பாணப் பேச்சுக்கள் ஒரு மீளாய்விற்குட்படுத்த வேண்டியதன் அவசியமும் இங்கே தெளிவாக்கப்படுகின்றது. "சருவதேச சமூகம் மீண்டும் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் பேச்சுக்களை தொடங்க முயலும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் யாழ் பேச்சுக்கள் தொடர்பில் ஒரு நுணுகிய பார்வை இப்போது அவசியமாகின்றது. இதன்மூலம் புலிகளின் மனநிலை, அவர்கள் உளமார்ந்த நிலைப்பாடு என்பனவற்றை அறிய முடியும். ஏனெனில் சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் தொடர்பில் புலிகள் காட்டும் மிக ஆழமான அவநம்பிக்கை, பேச்சில் ஈடுபட அவர்கள் காட்டும் பெரும் தயக்கம், இவையெல்லாவற்றினதும் வேர்கள் யாழ் பேச்சுக்களின் போது புலிகளின் தலைமை பெற்ற கசப்பான அனுபவங்களிலேயே உள்ளன" என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

எதனை ஆதாரமாகக் கொண்டு எவ்விதம் நூல் ஆக்கப்பட்டுள்ளது? இதனையும் அறிமுகவுரையில் ஆசிரியரே விளக்கிவிடுகின்றார். "முரண்பாடுகளின் தீர்வு தொடர்பில் இதுவரை அறியப்படாத ஒரு தனித்துவமான முறையில் யாழ் பேச்சுக்கள் நடைபெற்றன ("Adopting a peculiar modality hitherto unknown in the discourse of conflict resolution") இவை இரண்டு மட்டத்தில் நடைபெற்றன. ஒரு மட்டத்தில் இரு தரப்பினதும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் நேரடிப் பேச்சுவார்த்தை; மறு மட்டத்தில் அரசினதும் புலிகளினதும் தலைமைகள் பரிமாறிக்கொண்ட கடிதங்கள் மூலமான மறைமுக பேச்சுவார்த்தை; ஆறுமாத காலத்தினுள் ஆக நான்கு சுற்றுக்கள்; அவையும் ஒவ்வொன்றும் ஓரிரு நாட்களே நீடித்த மிகக்குறுகிய காலவளவைக் கொண்டவை; எனவே மிகப் பரந்துபட்ட ஒரு அரசியல் சிக்கலை அதுவும் முடிவுகள் எடுப்பதற்கு அதிகாரமற்ற ஒரு தாழ்நிலைக் குழுவோடு (Low key team) பேசி எவ்வித நேரடிப்பயன் எதுவுமே கிட்டாத நிலையில் இருதரப்பு தலைமைகளுக்கிடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகளே முக்கியமானதும் தீர்க்கமானதுமாகின்றன" இவற்றில் பல தலைவர் பிரபாகரனுக்கும் சிறிலங்கா அரசின் தலைவி என்கிற வகையில் சந்திரிகா அம்மையாருக்கும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்கிற வகையில் ரத்வத்தவிற்குமிடையிலானவை. ஏனையவை திரு தமிழ்ச்செல்வனுக்கும் திரு. பாலபத்தபெந்திக்கும் இடையிலானவை. ரத்வத்தவிற்கும் தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான சில கடிதங்களும் நூலில் உள்ளன. இவ்வாறாக கடிதங்களுக்கூடாக ஒரு காலகட்ட அமைதிப்பேச்சு வரலாறு நகர்த்தப்படுகின்றமை இந் நூலின் புதுமை (மொத்தமாக 49 கடிதங்கள்).

நூலின் முதலாவது அத்தியாயம் மட்டுமே அமைதிப்பேச்சுக்களின் முதலாவது சுற்று (1994 ஒக்ரோபர் 13, 14) அமைதியாக நடந்ததை பதிவு செய்கின்றது. 1994 ஆகஸ்டில் அம்மையார் பிரதம மந்திரியாக பதவியேற்றபின் காட்டிய நல்லெண்ணத்தைப் பாராட்டியும் தலைவர் தனது நிலைப்பாட்டினை மிகத் தெளிவாகவும் (1. பூரணமாக பொருண்மியத் தடை நீக்கப்படல், 2 இயல்புநிலை உருவாக்கல், 3 நிபந்தனையற்ற பேச்சுக்கும், போர்நிறுத்தத்திற்கும் தான் தயாராகவிருக்கின்றமை) விளக்கி எழுதிய 02. 09. 1994 திகதிய முதலாவது கடிதம் இடம்பெறுகின்றது. எனினும் அம்மையார் முதலாவது சுற்றுக்கு அனுப்பிய தாழ்நிலை அரசாங்க குழு தொடர்பில அவர் ஐயம் கொள்ளத்தொடங்கியமையும் இங்கே குறிப்பிடப்படுகின்றது. தலைவர் எழுதிய முதலாவது கடிதத்திற்கும் அவர் இறுதியாக அனுப்பிய 18. 04. 1995 திகதியிட்ட கடிதத்திற்கும் இடைப்பட்ட காலபகுதியில் நடந்தவை மிக விரிவாக காலவொழுங்கு முறைப்படி வரிக்குவரி கடித ஆதாரங்களோடு அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. முரண்பாடுகள் எவ்வாறு முற்றின என்பது சம்பவங்கள் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம்சுற்றுப் பேச்சுக்கள் (சனவரி 2,1995), மூன்றாம் சுற்றுப்பேச்சுக்கள் (சனவரி 14.1995) வெளித்தோற்றத்திற்கு மோதல் தவிர்ப்பு உடன்பாடு, சில பொருட்களின் தடை நீக்கம் போன்றவற்றிற்கு வழிவகுத்த போதும் உண்மையிலே ஆழமான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவே வழிவகுத்தன. இப்பேச்சுக்கும் இவற்றின் பின்னரும் முன்னரும் ரத்வத்தவும், அம்மையாரும் அனுப்பிய கடிதங்களும் தலைவர் மனதிலே எத்தகைய எண்ணவோட்டங்களை கிளப்பின என்பதை பாலா அண்ணை வெகுபக்குவமாக பதிவு செய்துள்ளார். இச்சிந்தனை வரலாற்று வழிவந்த சிங்கள பேரினவாதத்தின் கருத்தியல் தோற்றம் பற்றியது. மக்கள் அன்றாடம் படும் இன்னல்களை முதலில் நீக்குங்கள் என 6மாதகாலத்தில் ஒவ்வொரு தடவையும் புலிகள் வற்புறுத்தியபோது இழுத்தடித்து இறுதியில் இவை பாதுகாப்பு தொடர்பானவை, இராணுவத்தின் நலன்களுக்கு தீங்குபயப்பவை (பக்கம் 108, அம்மையாரின் 09 03.1995ம திகதி மடல்) என காரணம் காட்டப்பட்டதன் ஆழமான உள்ளர்த்தம் என்ன? இதுவே இந்நூல் மூலம் பாலா அண்ணை எழுப்பும் பெரும் கேள்வியாகும். நூலின் இறுதியில் இதற்கான விடை விரிவாகத் தரப்பட்டுள்ளது. முடிச்சவிழ்க்கப்படாத புதிர் ஒன்று இந்நூல் மூலம் முடிச்சவிழ்க்கப்படுகின்றது. எம்மக்கள் தாம் எதிர்நோக்கிய அரசியல் சிக்கலை தீர்க்க முயன்றபோது அதைத் தடுக்கவே இராணுவ அடக்குமுறை உள்ளிட்ட தடைக்குமேல் தடை அவர்களால் விதிக்கப்பட்டது. இப்போது அவர்களே அரசியல் சிக்கலை தீர்க்க முன்வருவதாக கூறும்போது எம்மக்களின் அன்றாடவாழ்வைச் சிதைக்க அவர்களே இட்ட தடை, நீக்கவேண்டியது அவர்களின் பொறுப்பு அல்லவா? இத்தடை நீக்கம் எவ்வாறு இராணுவ நலன்களைப் பாதிக்கும்?

இதுவே பேச்சுவார்த்தைகள் தோற்றமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று. இதனையே நூலாசிரியர் பக்கம் 110இல் தொகுத்துத் தருகின்றார்.



www.eelamview.com

www.eelamview.com





நூலாசிரியர்
அன்ரன் பாலசிங்கம்

(அ) பொருண்மியத்தடை பூரணமாக நீக்கப்படாமை, அவ்வாறு நீக்கப்பட்ட பொருட்களும் எம்மக்களை சென்றடையாமை

ஆ) அரசாங்கம் ஒரு நீடித்த நிலையான போர் நிறுத்தத்திற்கு தயாராக இல்லாமை

(இ) கரையோர மேலாதிக்கத்தைப்பேண மீன்படித்தடையை நீக்காமை

(ஈ) கிழக்கில் போராளிகளின் பாதுகாப்பு ஆபத்துக்குள்ளாக்கப்பட்டமை

(உ) தரைவழிப்பாதை திறக்க உடன்படாமை அதாவது பூநகரி இராணுவ முகாமை மூட விரும்பாமை. இவற்றினை விட இன்னொரு பிரதான காரணமும் பேச்சுக்கள் தோற்றமைக்கு வழிவகுத்தது. அது புலிகள் தொடர்பான அல்லது தமிழ்மக்களின் தேசிய இனச்சிக்கல் தொடர்பான சிங்களத்தின் மேலாதிக்க அணுகுமுறை. இதனை கண்டித்து தலைவர் அவர்கள் அம்மையாருக்கு அனுப்பிய 28. 03. 1995திகதிய கடிதத்தில் கூறுகின்றார் (பக்கம் 128) ''உங்களுடைய கடிதத்தில் உங்களது அரசாங்கத்தால் புலிகளுக்கு பல சலுகைகள் அல்லது விசேடித்த உரிமைகள் என்பன நம்பிக்கையை வளர்ப்பதற்காக வழங்கப்பட்டதாக எழுதியுள்ளீர்கள். உங்களது கருத்துப்படி ஆயுதங்களை கீழே வைக்க கோராமல் பேச்சுக்களை தொடர்கிறமை, மோதல் தவிர்ப்பு உடன்பாடு, யாழ்ப்பாணத்திற்கு பேச்சுவார்த்தைக்குழு அனுப்பப்பட்டமை எல்லாம் இத்தகைய சலுகைகள். இது தவறான பார்வை. இவை புலிகளுக்கு நீங்கள் வழங்கிய சலுகைகளோ அல்லது விசேட உரிமைகளோ அல்ல. இவை ஒரு அமைதி முயற்சியினை முன்னெடுப்பதற்கு தேவையான முன்னவசியச் சூழலை உருவாக்க அவசியமானவையாக கருதப்படவேண்டும். புலிகள் வெறுமனே ஒரு ஆயுதக்குழு என்கிற உங்கள் பார்வை தவறான கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. நாங்கள் தமிழ் மக்களின் உள்ளத்துணர்வுகளை, அபிலாசைகளை பிரதிபலிக்கின்ற, அவர்களோடு ஒன்றித்த இயக்கம். இவ்வடிப்படையிலான எமது முதன்மைத் தாவத்தினை ஏற்றே நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு முன்வந்தபின் அமைதி முயற்சிகளின் முன்னெடுப்பிற்கு அவசியமானவற்றை பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஒரு குழுவிற்கு வழங்கப்படும் சலுகைகளாக கருதல் தவறானதாகும்.'' இப்பதில் அம்மையாருக்கு மட்டுமல்ல பயங்கரவாதப்பட்டம் சூட்டும் அகில உலகத்திற்கும் பொருத்தமானதே. இதன் தொடர்பில் தன்னையொரு முற்போக்குவாதி, தாராண்மைவாதியாக தொடக்கத்தில் காட்டிக்கொண்ட அம்மையார் 1986 இன் முற்பகுதியில் சென்னையில் ஆசிரியரைச் சந்தித்தபோது தமிழ்மக்களின் தேசிய இனச்சிக்கலை எவ்வாறு மிகத்தவறாக வேண்டுமென்றே புரிந்துகொண்டிருந்தார் என்பதை முதல் அத்தியாயத்தின் தொடக்கத்திலே ஆசிரியர் எழுதியிருப்பதையும் வாசகர் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

இவ்வாறாக மூன்று சுற்றுப் பேச்சுக்களின் பின் நிலைமைகள் வேகமாக மோசமடைவதை பாலா அண்ணை வெகு கவனமாக பதிவு செய்கின்றார். தலைவரின் பொறுமையிழப்பு, தனது வேண்டுகைகளை நிறைவேற்ற ஒரு கால எல்லையாக 28. 03. 1995ம் திகதியை தனது 16.03.1995திகதிய கடிதம் மூலம் அறிவித்தமை. பின் அதனை 19. 04. 1995ம் திகதி வரை தனது 06.04.1995 திகதிய மடல் மூலம் நீட்டித்தமை. இவை எல்லாமே ஒரு காலக்கெடு என்றில்லாமல் அம்மையார் தனது நயவஞ்சக இரட்டை வேடப்போக்கினை மாற்ற கொடுக்கப்பட்ட கால அவகாசமும் முன்னறிவித்தலுமாகவே வரலாறு கருதும் என்பதே நூலின் முழுமை உணர்த்தும் செய்தி. இதன்பின்னரும் அம்மையார் தனது போக்கினை மாற்றாமல் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் ஒரு ஆயர் உட்பட பல தரப்பினரையும் இணைத்து அரசாங்க தூதுக்குழுவை நான்காம் சுற்றுக்கு 10. 04. 1995 அன்று அனுப்பியமை, அதன் பின்னான 12.04.1995 திகதிய அவரது கடிதம் எதுவுமே தலைவர் மனதினை மாற்றப போதுமானவையாக அமையவில்லை.

ஒரு விடுதலை இயக்கத்தோடு பழைய காலம்கடந்த புளித்துப்போன அணுகுமுறையான, அரசு என்கிற ஆணவ நிலையிலிருந்து அணுகுதல் கூடவே பௌத்த பேரினவாததிமிரும் சேர்ந்தால் என்ன பயன் விளையும் என்பதனை அம்மையாருக்கு மட்டுமல்ல உலகத்திற்கும் உணர்த்திய தலைவரின் வரலாற்றுப் பதிவாகிவிட்ட 18. 04. 1995 திகதியிட்ட இறுதி மடல் இவ்வாறுதான் முடிகின்றது. ''நாங்கள் உங்களுக்கு ஏலவே அறிவித்தது போன்று பேச்சுவார்த்தையிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்வது என்கிற வேதனைதரும் முடிவினை எடுப்பதைத் தவிர வேறுவழி எமக்கு முன்னில்லை.'' இவ்வாறாக வேறுவழி எதனையும் அம்மையார் முன்வைக்கவில்லை என்கிற நிலைப்பாட்டோடு 144ம் பக்கத்துடன் இந்நூல் முடிவடைந்திருக்கவேண்டும்.

ஆனால் இத்தோடு நூல் முடிவடையவில்லை. 1995 ஏப்பிரலிலிருந்து புலிகளுக்கெதிராக மிகப் பாரியளவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட அமைதிக்கான போர் என்கிற நயவஞ்சக பரப்புரைக்கு அடிப்படையாக அமைவது இரண்டே இரண்டு விடயங்கள். ஒன்று புலிகள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சடுதியாக தாக்குதலை தொடங்கினர் என்பது. மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின்படி 72 மணித்தியாலங்கள் முன்னறிவித்தல் கொடுத்தால் போதுமானது என்றிருந்த போதும் அரசியல் நிலைமைகளை கணக்கிலெடுத்தே தலைவர் அவர்கள் தனது மூன்று மடல்கள் மூலம் மூன்று வாரத்திற்கு மேற்பட்ட கால அவகாசத்தினை வழங்கினார் என்பது நூலின் வழி மிகத தெளிவுபடுத்தப்பட்டுள்ளது

இரண்டாவதும் வலுவான காரணமாக அம்மையாரால் முன்வைக்கப்பட்டது. புலிகளுக்கு அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களில் ஈடுபட துளியளவும் விருப்பமில்லை; நாங்கள் தயாராகவிருந்த போதும் அவர்கள் தட்டிக்கழித்தனர் என்பதே. இதற்கான பதிலே 145ம் பக்கத்திலிருந்து ஆரம்பமாகின்றது. பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கான காரணங்கள் நேர்மையாக புலிகளின் யதார்த்த நிர்ப்பந்த நிலைமை உட்பட - முன்வைக்கப்படுவதோடு இறுதிவரை வெளிச்சத்தைக் காணாத அரசியல் தீர்வு எங்கே? ஏன் அது நடைமுறைச் சாத்தியமாகவில்லை? என்பதும் தெளிவாக்கப்படுகின்றது. சிங்கள பௌத்த பேரினவாதம் எவ்விதம் ஆழ அகலமாக வேரோடி தாபனமயப்படுத்தப்பட்டு நிற்பதனையும் அதனைச் சார்ந்தே இயங்கும் (சாராமல் இயங்கமுடியாது) அம்மையார் போடும் இரட்டைவேடம், நயவஞ்சகம் என்பது எத்தகையது என்பது தெளிவாக்கப்படுகிறது. இப்போது அம்மையாரின் எல்லா வேடமும் அம்பலமாகி, சகல குட்டுக்களும் உடைந்து அமைதிக்கான போர், புலிகளுக்கு இராணுவத்தீர்வு, மக்களுக்கு அரசியல் தீர்வு என்பனவெல்லாம் மிக மோசமான கொடூரமான நகைச்சுவை துணுக்குகளாகிவிட்டன. புலிகளின் ஆறாண்டுகால விடுதலைப்போர், களத்தில் அம்மையாரின் அரசியல், இராணுவ இலக்குகளைச் சிதறடிக்க, இராசதந்திரக்களத்தில் திரு. அன்ரன் பாலசிங்கத்தின் நூல் இத்தப் பணியைச் செய்கின்றது.

உண்மையை உலகம் உணருமா? இனி மேலாவது ஒரு புதிய விழிப்பைப் பெறுமா? பாலா அண்ணை இவ்வாறுதான் நூலை நிறைவு செய்கினறார். ''தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போர் சிங்கள பௌத்த இனவாதத்தின் நேரடி வெளிப்பாடு என்பதை எப்போது சருவதேச சமூகம் உணர்கின்றதோ அப்போதுதான் இனபடுகொலை அழிவுகளை தமிழ்த்தேசத்தில் ஏற்படுத்தும் இப்போருக்கு உதவுவதிலிருந்து சருவதேச சமூகம் தன்னை விடுவித்துக் கொள்ளும்.'' இப்படியாக உணர வைக்கப்படும் முயற்சியே இந்நூல்.

O

(02 ஆம் பக்கத்தொடர்ச்சி)

## சூடேரிந்த வயல்....

இடிந்துவிட்ட தனது வீட்டை துப்பரவு செய்துகொண்டிருந்தார். அரைது வளவில் வீட்டைச் சுற்றி வளர்ந்திருந்த பற்றைகள் எல்லாம் வெட்டி எரிக்கப்பட்டிருந்தன.

''ஒவ்வொரு நாளும் இஞ்ச வாறனியளா?''

''இல்லயப்பன், கிழமைக்கு ஒருக்கா ரெண்டுதரம் வாறனான்.

இஞ்ச வந்து பெரிசா ஒண்டும் நான் செயயப்போறேல்ல.

சும்மா ஒருக்கா இந்த இடத்தில வந்து நிண்டாலும எவ்வளவு நிம்மதியாயிருக்கு. இஞ்ச வந்து நாங்க வாழ்ந்த இடத்தைப் பார்த்து ஒரு இரண்டு மணித்தியாலம் நிண்டிட்டுப் போனாலே மனதில திருப்தியாயிருக்கு.

சொந்த நிலத்தில பச்சத் தண்ணியெண்டாலும் சந்தோசமா குடிக்கலாம்'' என பிறந்த மண்ணில் வாழ்வதற்காக ஆதங்கப்படும் இவர்கள இந்த மண்ணின் சொந்தக்காரர்கள். மீண்டும் வேர்விடத் துடிக்கும் இவர்களின் குரல்களில் ஊடுருவியுள்ள ஆத்ம உணர்வுகள் உங்களிற்குப் புரிகின்றதா?

☼ ☼ ☼

''இதிலதான் தம்பி எங்கள கட்டிப்போட்டவங்கள்'' அந்த கொடிய அனுபவத்தை அவர் நடுக்கத்துடன் நினைவுகூர்ந்தார்.

''எங்கள எல்லாம் கொண்டு போய் ஒரு வீட்டுக்க அடைச்சாங்கள். முட்டுக்காலில இருத்திப் போட்டு அவங்கள் அடிச்சாங்கள்'' அடிவானததே தெரிந்த ஏதோ ஒரு புள்ளியை அவர் வெறிததபடி தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்.

''அது செல்வராசா எண்டு நினைக்கிறன்.

அவன்ர தலையைப் பிடிச்சு நிமித்திய ஆமிக்காரனொருத்தன் தன்னட்ட இருந்த 'சிகரெட் லைட்டரால்' செல்வராசாண்ட மீசையை எரிக்கத் தொடங்கினான்.

மீசை எரிந்துகொண்டிருந்தது தீப்புண்ணால் அவன்ர உதடுகள் கருகத்தொடங்கிச்சு. வேதனையாலகத்தின அவன்ர அவலக் குரலையும் மேவி அந்த வக்கிர வெறியங்கள் சிரிச்சுக்கொண்டிருந்தாங்கள்.''

இது நடந்தது கனகபுரத்தில். இன்று அதே இடத்தில் அந்த மக்கள் தம் சொந்த வீடுகளைக் கட்டிக்கொண்டிருந்தனர், அவர்கள் தம் சொந்த மண்ணிற்கு திரும்பி விட்டனர். அவர்கள் 'பீனிக்ஸ்' பறவைகள் இல்லைத்தான். ஆனாலும் மண்மேடாய்ப் போன வாழ்விடங்களிலிருந்து மீண்டும் அவர்கள் முளைவிட்டுக்கொண்டிருந்தனர். அற்பம் வயிற்றுப் பசிக்கு உணவுதேடிச் சென்றவேளையும், தாம் வாழ்ந்த இடங்களைப் பார்த்துவரச் சென்ற வேளையும் ஆக்கிரமிப்பு இராணுவத்தால் வெட்டப்பட்டும், கொல்லப்பட்டும், தப்பியோட விடப்பட்டு பின் ஓடுகின்றவேளை கலைத்துச் சுடப்பட்டும் அநியாயமாக இழந்துபோன தம் உறவுகளின் நினைவுகளை மட்டும் தான் அவர்களால் மறக்க முடியவில்லை.

☼ ☼ ☼

''இவளாலதான் தம்பி நாங்க இவ்வளவு கெதியா இஞ்ச வந்தனாங்கள்.

எப்ப பார்த்தாலும் ஆனையிறவு அடிச்சாச்சாம் எப்ப அம்மா வீட்ட போறது? எண்டு இவள் ஒரே ஆக்கினை தம்பி''

தன் ஐந்துவயது மகளைக் காட்டி தாய் சொல்லிக்கொண்டிருந்தாள். அவர்கள் இப்போது தம் சொந்த இடத்தில், 4ம் வாய்க்காலில் இருந்தனர். சிந்துஜா அன்னியமாய் இருந்த என் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தன் வேலையில் மூழ்கிப்போனாள். ஆம், அவளும் இங்கே மணலில் வீடு கட்டிக்கொண்டிருந்தாள். கிளிநொச்சியிலிருந்து அந்தக் குடும்பம் இடம்பெயர்ந்தபோது அவள் கைக்குழந்தை. தன் தாயின் முகம் மட்டுமே ஞாபகமாய் இருந்த மழலை. ஆனாலும் தன் சொந்த நிலம் மீதான தேடுதலை அவள் விடவில்லை. அந்த சின்ன உள்ளத்தின் உணர்வுகள் என்னைப் பிசைந்தன.

'' ஏன் சிந்துஜா, அப்படியோ அம்மாட்ட கேட்டனியள?''

எனது கேள்வியால் முகம் சிவந்து, ஓடிச்சென்று தாயின் மடியில் முகமபுதைத்து சிரித்த அந்த மழலையின் முகத்தில் மெல்ல வசந்தம் பூத்தது; அவர்களின் நகரத்தைப் போல.

O

### பிழை திருத்தம்

குரல் 95 இதழில், ''இறங்கப் போகும் சிங்கக்கொடிக்கு இசைக்கப்பட்ட முகாரி'' என்ற தலைப்பிலான கட்டுரையின் ஆரம்பத்தில் யூன் 9ம் திகதி என்றிருப்பது, மே 9ம் திகதி என அமைந்திருக்க வேண்டும்.



www.eelamview.com

www.eelamview.com



# ஆனைக்கு முந்திய மணியோசை

புலிகள் நடத்திய ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையோடு சந்திரிகா அரசாங்கம் தனது ஐந்துவருட ஆட்சிக்காலத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிடுவார்கள், அழிக்கப்பட்டுவிடுவார்கள் அதற்கான கால நிர்ணயம் கூட தனது கைகளிலேயே இருப்பதாக சிங்கள தேசத்திற்கும், உலக நாடுகளிற்கும் காட்டிவந்த ''மாய மான்'' மறைந்து போயிற்று. இதனால் மாய மானைக் காட்டி நடத்திய அரசியல் பிழைப்பை அச்சுறுத்துவதாக இராணுவ அரசியல் நெருக்கடிகள் எழுந்து தாண்டவமாடிய போது, பதிலிறுக்க முடியாது பதறிய அரசு தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தென்மராட்சியில் எடுதத படை நகர்த்தல் கவசத்தை புலிகளின் ஓயாத அலைகள் - 4 உடைத்தெறிந்து விட்டது.

சந்திரிகா அரசாங்கம் தனது வலுவனைத்தையும திரட்டி எடுத்த உச்சககட்ட முயற்சியாகவே தென்மராட்சியில் நடந்த 'ரிவிகிரண' 1-2, 'கினிகிர'-1-2 ஆகிய இராணுவ நடவடிக்கைகள அமைந்தன. இந்நடவடிக்கைகளின் அவசியத்திற்காக எழுந்த காரணங்கள் என்ன? நிர்ப்பந்தங்கள் எவை? என்பதைப் பார்ப்போமானால் அவை அதிலடைந்த விளைவுகளின் பரிமாணத்தையும் விளங்கிக்கொள்ள முடியும்.

(01) தென்மராட்சியில் புலிகளின் நிலைகொள்ளலால் இராணுவம் யாழ்ப்பாணத்தின பாதுகாப்பில் தனது படைவலுவை ஒருமுனையில் குவிக்க முடியாது பலமுனைகளிற்கும் (அரியாலை, கோப்பாய், புத்தூர், சரசாலை, சாவகச்சேரி, பளை, கிளாலி, நாகர்கோவில் . . . என) இழுத்துப் பரப்பவேண்டியுள்ளது. ஓயாத அலைகள் -03 இன் பின் மிகச் சொற்பமாக மாறிவிட்ட தனது தாக்குதற் படைகளை மேலும் வரித்துப் பரப்பவேண்டிள்ளதால் பாதுகாப்பு வியூகத்தில் ஏற்படக்கூடிய பலவீனம் கருதி படைத்தரப்பு திணறுகின்றது.

(02) தென்மராட்சியில் புலிகள் ஒரு தளத்தை தக்கவைத்திருக்கும் வரைக்கும யாழ்ப்பாணத்தின் எந்த முனை நோக்கியும புலிகளால் பாய முடியும் என்ற அச்சம.

(03) யாழ்ப்பாணம் புலிகளின் கைகளில் விழுந்தால் அதனால் ஏற்படக்கூடிய படையிழப்பு, படைக்கலங்களின் இழப்பு, மொத்தமாக ஸ்ரீலங்காப் படைகளின் போருக்கான மனோதிட இழப்பு, ஆட்சேர்ப்பில் ஏற்படக்கூடிய இழப்பு என்பவற்றை படைத்தரப்பு கணித்துள்ளது.

(04) இராணுவச் சமநிலையில் புலிகளின் கை மேலோங்கிவிட்டதான சர்வதேச மதிப்பீட்டால் அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி.

(05) இனி, அரசபடையால் இழந்ததைக் கைப்பற்றவோ, இருப்பதைத் தக்க வைக்கவோ முடியாது என்ற சிங்கள மக்களின் அபிப்பிராயத்தால் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய உள்நாட்டு எதிர்ப்பலை.

(06) யாழ்ப்பாணத்தை புலிகள் மீட்டால் அதன்பின் புலிகள் அடையக்கூடிய அரசியல் ஸ்திரத்தன்மை.

(07) புலிகள் அடையும் வெற்றியின் பின்னால் உலகத்தமிழர் மத்தியில் எழக்கூடிய போராட்ட ஆதரவெழுச்சி.

(08) சமாதான முயற்சிக்கு சர்வதேசம் கொடுக்கக்கூடிய அழுத்தமும், அப்போது இராணுவ மேலாண்மை நிலையிலிருந்து ஒரு ''அடிமை சாசனத்தை'' திணித்துவிடும் தனது திட்டத்தை நிறைவேற்றவோ அல்லது பேரினவாத நலன்களை பிரதிபலிக்கும் நிபந்தனைகளையிடவோ கூட முடியாத பலமின்மை.


**- பிரபுத்திரன்**

என விரிந்துசெல்லும், அரசியல் தாக்கங்களை எதிர்கொள்ள தனது எஞ்சிய படை இயலுமையை ஒருங்கிணைத்து அரசு தனது இராணுவ, பொருளாதார பலமனைத்தையும் திரட்டி முயன்றது. இந்நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணத்திற்கான உடனடி அச்சுறுத்தலை தவிர்த்தல், இராணுவ சமநிலையில் புலிகளின் கை மேலோங்கிவிட்டது என்ற சர்வதேச மதிப்பீட்டைக் குலைத்தல், படையினரின் போருக்கான மனோதிடததை உயர்த்துதல் போன்ற இலக்குகளை அடையவிருந்த படைத்தரப்பு சம்பாதித்தது என்ன? என்பதே நாம் இங்கு அவதானிக்க வேண்டியது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த, தலுவதத ஆகியோர் உட்பட ஏனைய படைத்தளபதிகளும நேரடியாக வழிநடத்த, புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பலகுழல் பீரங்கி உள்ளடங்க, இதுவரை பயன்படுததியிராதளவு செறிவான சூட்டுப் பலத்தோடு படையினர் கடந்த ஒக்டோபரில் ஆரமபிதத 'ரிவிகிரண -1 அதன் பின்னான ரிவிகிரண -2 மற்றும் கினிகிர - 1, கினிகிர -2 நடவடிக்கைச் சமர்களில் படையினர் சநதித்த இழபபுககளும், தமது நடவடிக்கை இலககுகளை எட்டமுடியாமல் போனமையும அரசிற்கு பெரும் அதிர்ச்சி வைத்தியமாகவே இருந்திருக்கும். இந்நடவடிக்கை களங்களில் இருந்துமட்டும் 400 வரையான படையாட்கள கொல்லப்பட்டும், 1800 வரையானோர் காயப்பட்டும களததிலிருந்து அப்புறப்படுததப்பட்டுள்ளனர். இவை தவிர

## ஓயாத அலைகள் - 04

முறியடிப்பு தொடர் நடவடிக்கைகளிலும் 53வது டிவிசன் மிகப் பெருமளவு இழப்பைச் சந்திததது. அம்பகாமம், மாங்குளம் பகுதியிலும் பின்னர் ஆனையிறவிலும், சாவகச்சேரியிலும் 55வது டிவிசன் கணிசமான தனது படையினரை இழக்க நேர்ந்தது ஸ்ரீலங்காவின் தாக்குதற் படையணிகளான இம்மூன்று டிவிசன்களும் இவ்வாறான இழப்பைச் சந்தித்திருக்க, நடவடிக்கையில் உதவிப்படையாகச் செயறபட்ட கனகராயன் குளத்தை தலைமையகமாகக் கொண்டிருந்த 56வது டிவிசன் தனது பெரும் பான்மைப் படைவலு இழக்கபபட்ட நிலையில் முன்னணிப் போர்முனையில் பங்காற்ற முடியாதநிலையில் இன்று உள்ளது. இத்தகைய முன்னணிப் படைகளின் இழப்பு படையினரின் தாக்குதற் பலத்தை சிதைததுவிட்டிருக்கின்றது. இந்நிலையில் ஆனையிறவு உள்ளிட்ட யாழ்ப்பாணத்திற்கான நுழைவாயில்களை புலிகளிடம் இழந்துவிட்ட படைத்தரப்பு யாழ்ப்பாணத்திற்கெழுந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக சிதைககப்பட்ட இவ் டிவிசன்களின் எஞ்சியவர்களையே நமபியிருககவேண்டிய நிர்ப்பநதத்தில் உள்ளது. இப்படைவலுவின் போதாமை கருதி இவற்றை ஒருங்கிணைத்து நடவடிக்கையில்



பகைவெல்லப் பாயும் வகைசொல்லும் தமிழர் தலைவன்!

ஓயாத அலைகள் -03 ல் இருந்து இன்றுவரை பெயர் சூட்டப்படாமல் படையினரால் நடாத்தப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகளிலும், பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் கொல்லப்பட்ட, காயமடைந்து களத்திலிருந்து அகற்றப்பட்ட படையினரின் எண்ணிக்கையைப் பார்த்தால் படை இழப்பு எண்ணிக்கை என்பது இன்னும் அதிகம் உயரும். புலிகளின் ஓயாத அலைகள -03 இன் முன் இந்தப் படையிழப்பென்பது ஸ்ரீலங்கா இராணுவத்தின் படையிருப்பால் ஈடுசெய்யக் கூடியதானதாக இருந்திருக்கலாம். ஆனால், இன்றைய நிலை அதுவல்ல.

ஸ்ரீலங்கா படைத்தரப்பு இன்றுள்ள நிலையில், இவ்விழப்புக்கள் அதன் பலத்தில் பெரியளவான தாக்கத்தை விளைவிக்கக்கூடியதாகவே உள்ளது. புலிகளின் ஓயாத அலைகள் -03 இனால் ஸ்ரீலங்காவின் முன்னணிப் படைகள் பெரும் இழப்பை சந்திக்க நேர்ந்தது. குறிப்பாக பரந்தன், உமையாள்புரம், வெற்றிலைக்கேணி, ஆனையிறவுப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த 54வது டிவிசனின் சிதைவினால் இது இன்று கலைக்கப்பட்டுள்ளது. தாழையடித் தளத்திலும், பின்னர் இத்தாவில் - கண்டிவீதியில் நிலைகொண்டிருந்த புலிகளுக்கெதிரான கடுமையான படைத்தரப்பு பயன்படுத்திவருகின்றது. இதனால் பயன்படுத்தப்படும் இப்படைவலுவும் மேலும் இழப்புகளைச் சந்திக்கவேண்டியுள்ளது.

மொத்தத்தில் இந்நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு மீதான அச்சுறுத்தலை தவிர்க்க முடியவில்லை; புலிகளின் தாக்குதற் பலத்தை சிதைக்கமுடியவில்லை; படையினரின் போருக்கான மனோதிடத்தை உயர்த்த முடியவில்லை; இராணுவ சமநிலையில் புலிகளின் கை மேலோங்கிவிட்டதான சர்வதேச மதிப்பீட்டைக் குலைக்க முடியவில்லை. ஆக, இவற்றிற்கு எதிர்மாறான நிலையையே நடவடிக்கை அடைந்தது. ஆனால் அரசாங்கமோ புலிகளின் முன்னேற்றத்தை தாம் தடுத்து நிறுததிவிட்டதாகவும், புலிகள் பாரிய இழப்புகளைக் கண்டுவிட்டதால் தொடர்ந்து முன்னேற முடியாதிருப்பதாகவும், தமது புதிய ஆயுதக் கொள்வனவு புலிகளை முடக்கிவிட்டதாகவும, மீண்டும் இழக்கப்பட்ட பகுதிகள் பிடிக்கப்பட்டு வருகின்றன என்றும் தாம் போட்ட கோசத்தை மெய்ப்பிப்பதற்காக நடவடிக்கைகளை காட்ட முயல்கின்றது ஆனால் அவைகண்ட பேரிழப்பு ஒருபுறம் போக புலிகள ஓயாத அலைகள் - 04ஐ தொடக்கி தாம் தேர்ந்தெடுத்த நிலப்பகுதியில் களத்தைத் திறந்து, எஞ்சியுள்ள இராணுவ பலத்தை சிதைத்து, யாழ் மீட்பிற்கான முன் நடவடிக்கைச் சமர் ஒன்றைத் தொடங்கியுள்ளனர்.



www.eelamview.com

www.eelamview.com



26/09/2000 அன்று பகல் 2.45 மணியளவில் கிளாலி, பளை, நாகர்கோவில் என மும்முனைகளில் ஓயாத அலைகள் - 04 சமரைத் தொடங்கினர் புலிகள். அடுத்து நகர்ந்த இரண்டு நாட்களுக்குள் நடந்த சண்டைகளில் 9 கி.மீ நீளமான தொடர் காவலரண்களைக் கைப்பற்றி கிளாலி, எழுதுமட்டுவாள் படைத் தளங்களுக்கு அமைக்கபபட்ட முன்னரங்க பாதுகாப்பை உடைத்து புலிகள் முன்னேறினர். இத்தகைய நகர்வை அடுத்து புலிகள் தொடுக்கும் அடுத்த தாக்குதல் பிரதான தளங்களான கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் படைத்தளங்களின் மீதான நேரடித் தாக்குதலாக அமையுமென்பதால் புலிகளின் ஒரு பாயச்சல்கூட தளத்தை வீழ்ச்சியடையச் செய்யும் நிலையுள்ளது. அத்துடன் இவற்றிற்கிடையிலான விநியோக மார்க்கங்களும, பாதுகாப்பு வியூகங்களும் பரஸ்பர தொடர்பு கொண்ட வலைப்பின்னலாக அமைந்திருப்பதால் ஒன்றின் வீழ்ச்சி மற்றதினது வீழ்ச்சிககும் அடிகோலும் எனபதை உணர்ந்துள்ள படைத்தரப்பு தனது திரட்டக்கூடிய படையனைத்தையும் புலிகளை எதிர்கொள்வதற்காக இக்களமுனையில் நிறுத்த வேண்டியுள்ளது. இழக்கபபடும் படைத் தொகைக்கேற்ப புதிய படையணிகளைக் கொண்டுவந்து நிறுத்தவேண்டிய களநிர்ப்பந்தத்தை உருவாக்கியதன் மூலம் ஸ்ரீலங்காவின் உண்மைப் படைத்திரட்டு நிலைகொண்டுள்ள யாழ்ப்பாணத்தில், முனனணிப் படைகளைக் கவர்ந்தழிககும் ''கொலைப்பொறி'' யை ஏற்படுததி ஓயாத அலைகள் -04 களததை இயக்கி வருகின்றனர் புலிகள்.

யுத்தத்தின் இறுதி வெற்றியென்பது எதிரிப்படை போரிடும மனநிலையை இழத்தலிலேயே தங்கியிருககின்றது. போரிடும் மனநிலையிழபபு என்பது வெற்றியை அடையமுடியாத தொடர்ச்சியான உயிரிழப்புக்களிலேயே தங்கியிருக்கிறது புலிகள் விடுதலைப் பயணததில் வன்னிச்சமர் நடவடிக்கைகளில் தமது மரபுப் போர் ஆற்றலைக்கொண்டு எதிரி ஒரு தந்திரோபாய பின்வாங்கலைச் செய்யமுடியாதவாறான தாக்கியழிப்புச் சமர்களையே செய்துவந்துள்ளனர். வன்னிக்களததில் இராணுவம் தனது நடவடிக்கையின இலக்குகளை எட்டவோ, தமது இலக்குகளிலிருநது இராணுவத்தினரை தப்பவோ புலிகள் அனுமதித்திருக்கவில்லை.

ஓயாத அலைகள் -04 தொடங்கப்பட்டதிலிருந்து MI-24 உலங்குவானூர்தி ஒன்று சுட்டு வீழ்ததப்பட்டும், மற்றொன்று சேதமடைந்தும் 250 வரையிலான இராணுவம் கொல்லபபட்டதுமான 19/10 அன்றைய சண்டைவரையில் 700 வரையான படைததுருப்புக்கள கொல்லப் பட்டதுடன், 250 பேர்வரையிலானோர் காயப் பட்டு களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் (அரசு: 266 பேர் கொல்லப்பட்டும் 2000பேர் காயமடைந்ததாகவும் அறிவித்தது) இழக்கப்பட்ட படையினர் 53, 55வது டிவிசன்களையே பெரும்பாலும் சேர்ந்தவர்கள். புலிகள் தேர்நதெடுத்த ''கொலைமுனைக்கு'' தனது முனனணிப் படைகளை தொடர் அழிவுகளுக்கு மத்தியிலும் அனுப்பியே ஆகவேண்டிய நிர்ப்பநததிறகுள் படைத்தரப்பு சிக்கியிருக்க, மறுபுறம ஓயாத அலைகள் - 04 இன் கடல் நடவடிககையாக கடற்புலிகள் திருமலைத் துறைமுகத்தின் மீது நடத்திய பாய்ச்சலால் படைததலைமை அதிர்ந்து போயுள்ளது.

யாழ் குடாநாட்டு ஆக்கிரமிப்பும், ஆக்கிரமிப்பு இராணுவமும் கடல்வழி விநியோகத்தையே ஆதாரமாகக் கொண்டவை. கடற்புலிகளின் பலம் விநியோக மார்க்கததிற்கும், விநியோகததிற்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்துவநதுள்ளது. இந்நிலையில், குடாநாட்டை மட்டெடுப்பதற்காக புலிகள் ஒரு சமரைத் தொடங்கியுள்ள சூழலில் விநியோகம் கொண்டிருக்கக்கூடிய பளு சாதாரண சூழலைவிட பலமடங்கு அதிகமாகவே படைத்தரப்பை அழுத்தும். பளுவைச் சுமப்பதில் சிறு பிசிறு ஏற்படடாலும் கூட அது நேரடியாக யுத்தத்தைப் பாதிப்பதாகவே இருககும. இத்தகையதொரு சூழலில் தான் கடற்புலிகள் திருகோணமலைத் துறைமுகத்தினுள் புகுந்து ஒரு அதிர்சசித் தாக்குதலை நடாததியுள்ளனர்.

26.09.2000 அன்று பகல் 2.45 மணியளவில் கிளாலி, பளை, நாகர்கோவில் என மும்முனைகளில் ஓயாத அலைகள் - 04 சமரைத் தொடங்கினர் புலிகள். அடுத்து நகர்ந்த இரண்டு நாட்களுக்குள் நடந்த சண்டைகளில் 9 கி.மீ நீளமான தொடர் காவலரண்களைக் கைப்பற்றி கிளாலி, எழுதுமட்டுவாள் படைத்தளங்களுக்கு அமைக்கப்பட்ட முன்னரங்க பாதுகாபபை உடைத்து புலிகள் முன்னேறினர்.

யாழ் குடாநாட்டு இராணுவத்திற்கு விநியோகத் தளமாக திருகோணமலைத் துறைமுகமே இருநதுவருகின்றது. அத்துடன் வடக்கு கிழக்கு கடல்ரோந்து கணகாணிபபு நடவடிக்கைக்கான கடற்படைத்தளமும் இத்துறைமுகமே. எனவே யாழ் குடாநாட்டுப் பேருக்கு இது ஜீவாதாரமானது ஆயின் இதன் மீதான தாக்குதலும் குடாநாட்டு இராணுவத்தின் ஜீவாதாரத்தின் மீதான தாககுதலாகவே கொள்ளமுடியும். இத்தகையதொரு நுட்பமான தாக்குதலையே 23-10-2000 அன்று புலிகள் நடத்தியிருந்தனர்.

இந்தப் போரில் திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் கருதி மிகக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை படைத்தரப்பு செய்திருந்தது. இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்து 23ம் திகதி அதிகாலை துறைமுகபபகுதியில் புகுந்த கடற்கரும்புலிகளின் தாக்குதற் படகுகள் துறைமுகத்தினுள் நிலைகொண்டிருந்த கப்பற தொகுதிமீது தாககுதலை நடாத்தின.

இதே வேளை திருமலைப் படையணி துறைமுக கடற்படைத் தளமமீதும் கப்பற் தொகுதி மீதும், உதவிக்கு விரைந்த இராணுவத்தினர், கடற்படையினர் மீதும் மோட்டார் எறிகணைத் தாக்குதலை நடத்தியது. உதவிக்கு வந்த MI-24 உலங்கு வானூர்தி ''ராதா விமான எதிர்ப்பு அணி''யினரால் சுட்டுவீழ்த்தப்பட்டது. தாக்குதலுக்கு தளமாக பயன்படுத்தப்பட்டதாக படைத்தரப்பு கருதும் 'மாபிள்பீச்', வெள்ளை மணற்பகுதி, நாச்சிக்குடா என்பவை இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருக்கக்கூடிய நிலையில் எவ்வாறு புலிகள் கனரக ஆயுதங்களுடன் நகர்ந்து தாக்கினர் எனபது படைத்தரப்பை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. யாழ் குடாநாடு மீது புலிகள் நடவடிக்கையை தொடங்கியுள்ள இச்சூழலில் துறைமுகம் மீதான புலிகளின இத்தகைய ஒருங்கிணைந்த வெற்றித் தாக்குதல் படைத்தரப்பை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மொத்தத்தில் ஓயாத அலைகள் - 04 நடவடிக்கையில் இரு MI-24 உலங்குவானூர்திகளை இழந்ததுடன, ஒரு பீரங்கிப் படகையும், இரண்டு கடற்படைக் கபபல்களையும், ஒரு விநியோகக் கப்பலையும் இழந்ததோடல்லாமல் 700 வரையான இராணுவம் கொல்லப்பட்டும் 2800 வரையிலானோர் காயமடைந்துமுள்ளதான களமுனையின் இழப்பிற்குப் பின்னும் சிங்கள அரசாங்கத்தின் யாழ் ஆக்கிரமிப்பு மீதான விடாக்கண்டத்தனத்தால் புலிகளின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க படைததரப்பு திணறுகின்றது.

புலிகளோ யாழின் மீட்பிற்காக வாய்ப்பானதும், மக்களது உயிர்ச்சேதம் நிகழாததும், உடமைச் சேதத்தை தவிர்க்கக் கூடியதுமான நிலப்பிரதேசத்தில் யுத்தத்தை மையங்கொள்ள வைத்து, தாம் திறந்த களப்பூமியில் எதிரிப் படைகளை கவர்ந்தழிக்கும் நடவடிக்கையாக ஓயாத அலைகள் -04ஐ தொடர்கின்றனர்.



யாழ்ப்பாணததை தக்கவைபபதற்காக நிறுத்தப்பட்ட எதிரியின் முன்னணிப்படை சிதைபச் சிதைய யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு எனும் சிங்கள அரசின் கனவுக்கோட்டை சரிந்துகொண்டிருக்கின்றது. ஓயாத அலைகள் -04 தொடர்கினறது. ○

(05ஆம் பக்கத்தொடர்ச்சி)

## ஆயிரம் கதை...

வாக்குகள் இதனை நோக்கி நகர்ந்ததை விடவும் பேரினவாத சக்திகளின் வாக்குகளும் இதனை நோக்கி நகர்ந்துள்ளமை இதற்கு பிரதான காரணம். தீவிர சிங்கள இனவாதிகளை விடவும் சிறந்தவகையில் *அரசியல்தீர்வு யோசனைகளுக்கெதிராக போராட்டங்கள் நடத்தியமை* இதற்கொரு காரணமாக அமையலாம்...''

இம்முறை இன்னொரு நுட்பமான பேரினவாதப் போக்கு, அரசியல் சாயங்களான தேசிய ஐக்கியம், தேசிய அரசாங்கம் என்பவற்றைப் பூசிக்கொண்டு சிங்களத்தில் மேறகிளம்புகின்றது. அடுத்த ஆறாண்டிற்கு அரசியல் சூனியத்தில் அமையப்போகும் ஐ. தே. கட்சி, செல்நெறி தெரியாது பூதாகார பொருண்மிய நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் பொதுசன முன்னணி, தமிழ், முஸ்லீம கட்சிகளை தங்கி ஆள்வதே அவமானம் என நினைக்கும் சிங்களச் சக்திகளின் போக்கு, இவற்றின் விளைவுகள் இவ்விரு கட்சிகளின் *தனித் தனி சுயநலப்போக்குகளை ஒருமித்த ஒரே சுயநலபபோக்காக்கிவிடுமோ* என்பது காலம சொல்லவேண்டிய செய்தி. ஆனால் நாமறிய வேண்டிய செய்திஇதுதான். கொண்ட கொள்கைகளைக் கைவிட்டு - சொந்த மக்களை வாட்டி வதைத்து துன்புறுத்தி - அம்மையாரின் கால்தூசியை நெற்றியில் பூசி துரோகத்திற்கே நவீன வரைவிலக்கணம் கொடுத்த தமிழர் என நாமம் பூண்டோரைக் கூட சிங்களச் சக்திகள் நம்பத்தயாராகவில்லை என்பதுதான அச்செய்தி.

இதற்கு மேல் என்ன விளக்கம் கூறமுடியும்? அவர்கள் நிலை அவ்வாறாயின் எம் நிலை எவ்வாறுள்ளது? இத்தகைய இழி அரசியலிலிருந்து முற்றிலுமாக விலகி மேன்மையுற்ற அரசியல் நிலையில் நாமிருக்கின்றோம். தமிழரின் அரசியல் வாழ்விலே புதியதொரு அரசியல் - இராணுவச் சமநிலை புலிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம் மூன்று கட்சிகளினது மட்டுமல்ல சிங்கள தேசத்தின் அரசியல் தலைவிதியே எங்கள் கைகளில். ''போர்க்களத்தில் வெற்றியைத் தீர்மானிப்பது நவீன ஆயுதங்களல்ல. போர் மூலோபாயம், படைவீரன் மனவுறுதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, கீழ்ப்படிவு. புலிகள் காக்கும் அமைதி பெரும் புயலுக்கு முன்னான அமைதி'' என்பவர் ஜானக பெரேரா (சண்டே லீடர் 27/8/2000). இது போர்க்களத்திற்கு மட்டுமல்ல அரசியல் களத்திற்கும் பொருந்தும். எனவே சிங்களத்தின் சகல அரசியல் இராணுவ அடக்குமுறை வடிவங்களையும் சிதைக்கும் ஒரேயொரு சக்தியான விடுதலைப்புலிகள் அதற்காக இப்போது பெறவேண்டியது விரைவான இராணுவ வெற்றியல்லவா? *அதனைப்பெற துணை நிற்க வேண்டியது நீங்களல்லவா?* ○



www.eelamview.com

www.eelamview.com



# நேற்றைத் துயர் தொலைய நிகழ்காலம் எம்பக்கம்

கண்ணெதிரே கரைந்துபோகிறது கனவு.
மண்ணெனவே உதிர்ந்துபோகிறது மனம்.
நெஞ்சுக்குள்ளே கோடுகளால் வரைந்த உருவம்கூட
ஒப்பேறமுன்னரே உருகிப்போகிறது.
நடைவழித்துணையாக நம்பிக்கை மட்டுமே
நம்பிக்கைமட்டும் நமக்கற்றுப் போயிருந்தால்
வெம்பிப்போய் என்றோ விழுந்திருப்போம்.
நாளை நமக்கெனும் நம்பிக்கையிற்தானே
வாழ்வு வசப்படுமென வரலாறே நகர்கிறது.
ஒருநாள் மட்டுமே உயிர்வாழுகின்ற
ஈசல்களுக்கேன் இறக்கை முளைக்கிறது?
நீண்டநாள் பறப்பேனென அதற்கு நினைப்பு
அதனால் முளைக்கிறது.
மாலையில் கருகும் மலர்களெல்லாம்
காலையில் என்னவாய் கண்சிமிட்டுகின்றன.
நாட்கள் பலவாக வாழ்வோமெனும் நம்பிக்கை
பூக்களுக்கிருப்பதாற்தானே அவை புன்னகைக்கின்றன;
எவரெஸ்ட் சிகரத்தை டென்சிங் தொட்டான்
அதற்குமுன்
எத்தனைமுறை ஏறியிறங்கினான்.
என்றோ ஒருநாள் தொடுவேனென்ற நம்பிக்கை
அவனுக்கிருந்தது அதனாலே வென்றான்;
நடக்கவேண்டுமா எழுந்து பார்,
கடக்கவேண்டுமா பாய்ந்து பார்.
எப்படிச் சாத்தியமாகுமென இடிந்து போனால்
இப்படியே கிடக்கவேண்டியதுதான்;
துரையப்பாவை தலைவர் சுட்டபோது
ஏன்சுட்டதென்று எவரும் கேட்கவில்லை.

## உலைக்களம்

- வியாசன்

எவர் சுட்டதென்றுதானே கேட்டார்கள்.
பின்னர் பிரபாகரனென்ற பெயரை
பிரமிப்புடன் உச்சரித்துக் கொண்டனர்.
பொன்னாலைப்பாலத்தில் புதைத்தகுண்டு வெடிக்காதபோது
என்னாலினி முடியாதென தலைவர் நினைத்திருந்தால்
ஆனையிறவைவெல்ல அவரால் முடிந்திருக்குமா?
எத்தனைபேர் அவருடன் நின்றார்கள்
பின்னர் சென்றார்கள்.
எத்தனைபேர் அவருடன் வந்தார்கள்
பின்னர் போனார்கள்.
கூட இருந்தவர்கள் அகன்றபோதும்
ஆடவில்லையே அந்த ஆலமரம்.
வெல்வேனென்ற விரியமும்
செல்வேனென்ற நம்பிக்கையும்
வல்வைமைந்தனுக்கு வாய்த்திருக்காவிடில்
ஈழத்தமிழருக்கு எப்போதோ
ஆண்டுத்திவசம் முடிந்திருக்கும்.
நம்பிக்கையே பலம் பொருந்திய தும்பிக்கை.
தளராதிருக்க வேண்டும் தமிழரே.
வன்னிக்கு வரும்போது வாழ்வே முடிந்ததென
எண்ணியிருந்தோமானால்
இதுவரைக்குள் எல்லாமும் தொலைத்திருப்போம்;
உன்னியெழுந்தோம்
ஊர்புகுவோம என்றுரைத்தோம்.
இன்று செம்மணியில் நின்று சிரிக்கின்றோம்.
நம்பிக்கைதானே நாற்றங்கால்.
ஒருநாளும் தளராதிருப்பவனே பெருவாழ்வுபெறுவான்.
முடியுமாயிதுவென மலைத்துப் போறவன்
பிடிமானமேதுமின்றிப் பொசுங்கிப்போய் விடுவான்;
ஊர்போக வேண்டுமா?
போவேனென நம்பு.
உயிர்வாழ வேண்டுமா?
சாகேனென நம்பு;
நம்பிக்கைதானே நாட்களை நகர்த்துகின்றது.
பிரபாகரனென்ற பெயர்
ஒரு மனிதனின் பெயர் மட்டுமல்ல
நம்பிக்கைக்கு இன்னொரு நாமம்.
வாழ்வு வசப்படுமென யார் நம்பினாலும்
அவனுக்கு வாசல் திறந்து கொள்ளும்.
ஈழத்தமிழரின் சோதனைக் காலம் முடிந்துவிட்டது
இனிச்சாதனைக் காலம்.
இருள்வாழ்வு எமக்கினி எப்போதுமில்லை
வெற்றியின் முகமே எமக்கினி விளங்கும்.
எங்கள் மூச்சுக் கலந்த காற்றுக்கு முன்பாக
நிற்கும் பலம் உலகத்தில் எவருக்கும் இல்லை.
நாங்கள் வேர்படர்ந்த அறுகம்புல்
கொத்திப் புரட்டினாலும் முளைப்போம்.
கொழுத்தி எரித்தாலும் துளிர்ப்போம்.
நிமிர்ந்த வாழ்வுவருமென நினை.
வருந்தி உழை.
தமிழீழம் வருமென நம்பு.
தளராது போரிடு.
உன்னை யாரழித்தல் கூடும்?
உமித்துகளல்ல உன்னை யாரும் ஊதித்தள்ள
கைவிலங்கற்று வீசும்காற்றை அவாவுவோம்.
வாசலில் வரவேற்கும் பூக்களை விரும்புவோம்.
சிறகடித்துப் பறக்கிறதே பறவை
அதன் சங்கீதத்துக்கு தாளமிடுவோம்.
விட்டு விடுதலையாகும் விடுதலை வேண்டும்
கட்டுக்களற்று
எந்தக்காயங்களுமற்று
தொட்டுமகிழ எமக்குச் சுதந்திரம் வேண்டும்.
முன்னரெமக்கொரு நிலமிருந்தது.
அந்தநிலத்திலொரு வாழ்விருந்தது.
அந்த வாழ்விலொரு வாசமிருந்தது.
வாசத்தைத் தொலைத்து எத்தனை வருடங்கள்?
போரிடுவோம்
தொடர்ந்து போராடுவோம்.
பிரபாகரனென்ற நம்பிக்கையுடனும்,
புலிகளென்ற தும்பிக்கையுடனும்,
போராடுவதுதான் பெருமைதரும்.
காடுகளையும், மலைகளையும் கடப்போம்.
மேடுகளிலும் பள்ளங்களிலும் நடப்போம்.
கால்கள் வலிக்குதெனக் களைப்பாறும் போதுதான்
பகைவனின் குதிரைகள் பக்கத்தில் வந்துவிடுகின்றன.
அதனால்,
நடக்கத்தொடங்கினால் இளைப்பாறல் கூடாது.
தொடர்ந்து நடப்போம்
சூரியன் கைக்கெட்டும் தூரத்தில்தான் சுடர்கிறது.
தமிழீழம்
அது எங்கள் உயிர்க்கோளம்.
உருவாகிவிட்டது சிசு
கருவாய் திறப்பதற்காகவே காத்திருக்கின்றோம்.
நடுகல்வரிசையை நாளும் தரிசித்து
விடுதலைக்கான வேகத்தை விரைவுபடுத்துவோம்.
ஆவிநிகர்த்த எம் '' அன்னைநிலத்தேவி ''
தன் அளகபாரம் நீவிமுடித்தாள்.
முத்துப்பரல்களைக் கொட்டிச்சிரித்தாள்.
பகைமுழுதும் தீயும் திசையுரைத்தாள்.
வரமளித்து வல்லமை நல்கினாள்.
உரம் கொண்டெழுந்தது ஓயாத அலை
இனி ஊர் முழுதும் எமதாக்கியே ஓயும்.
தாயின் துயரழித்தே தணியும்.
பகைவரை மட்டுமல்ல
துரோகிகளையும் அள்ளிவந்து
எம் காலடி எற்றும்.
காற்று எம்பக்கம்
கடலும் எம்பக்கம்
நேற்றைத் துயர் தொலைய
நிகழ்காலம் எம்பக்கம்
தாழ்வுற்று எம்தலைகுனிந்தது போதும்
வாழ்வு சமைப்போம் வாருங்கள்.

O



www.eelamview.com

www.eelamview.com



( 1ஆம் பக்கத்தொடர்ச்சி )

## தலைவரின் மாவீரர்நாள் உரை - 2000

வீப்பைக் கேட்டதுமே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவி செய்ய முன்வந்தன

இந்தியக் கடற்படையின் உதவியுடன் சிங்கள இராணுவத்தினரை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஸ்யா போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவி வழங்க முன்வந்தன. முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணிதிரண்டது. மிகவும் சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும் ரஸ்யாவும் நவீனரக போர் விமானங்களையும் உலங்குவானூர்திகளையும் அனுப்பிவைத்தன. அவசர அவசரமாக ஆயுத ரீதியில் சிங்கள இராணுவ இயந்திரம் வலுப்படுத்தப்பட்டது. அபாயச்சங்கை ஊதி, உலகத்தின் உதவியைப் பெற்று, இராணுவத்தைப் பலப்படுத்தி, யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணச் சமரில் ஒரு தலைப்பட்சமாக உலகநாடுகள் குறுக்கிட்டு சிங்களத்திற்கு உதவிகளை வழங்கியதால் எமது போர்த் திட்டங்களைத் தாமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

1995ல் யாழ்ப்பாண நகரை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்தபோதும், அதன் விளைவாக 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபோதும் உலகம் கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தது. ஆனால் இப்போது சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குள் வரும் புறநிலைகள் தோன்றியபோது உலகநாடுகள் பதட்டமடைந்து சிங்கள அடக்குமுறை ஆட்சியாளருக்கு உதவிகளைச் செய்வது எமக்கு ஒரு புறத்தில் ஏமாற்றத்தையும், மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கிறது.

யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானதல்ல. யாழ்ப்பாணம், யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீகச் சொத்துரிமையல்ல. இறையாண்மையானது மக்களிடமிருந்தே பிறக்கிறது. அது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தின் இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையைத் திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப் படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப்போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும், எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்.

எல்லாச் சமர்களுக்கும் தாய்ச் சமராக விளங்கிய ஆனையிறவுச் சமரிலும், மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாண நகராட்சிப் பகுதிகளில் நிகழ்ந்த சமர்களிலும் களமாடி சாதனை படைத்த சகல போராளிகளுக்கும் படை நகர்த்திய தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்கள். எல்லைப் படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாகப் பங்குகொண்டு போராடியது எமது விடுதலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பையும் பலத்தையும் அளித்தது. குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி எடுத்து, பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்குகொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொது மக்கள் இணைந்துகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியற் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருக வேண்டும். அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவுபெறச் செய்யும்.

எனது அன்பான மக்களே,

மீண்டும் ஆறாண்டு காலம் சந்திரிகாவின் ஆட்சி தொடரப் போகிறது. இந்த ஆறாண்டு காலமும் இத்தீவில் அமைதி நிலவுமா அல்லது போரும் வன்முறையும் தலைவிரித்தாடுமா என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப்போகும் கொள்கையிலும் அணுகுமுறையிலும்தான் தங்கியிருக்கிறது.

இந்த அரசானது தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. புலிகளுக்கு எதிராகப் போர் முரசு கொட்டித்தான் தேர்தலைச் சந்தித்திருக்கிறது. மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள், வன்முறைகள் வாயிலாகவே வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இனவாதக் கடும்போக்காளர்களே இந்த அரசின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றிருக்கிறார்கள். ஆயுத வன்முறையைப் பாவித்து, மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து, சனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிய தமிழ்த் துரோகிகளும் இந்த ஆட்சிபீடத்திற்கு முண்டுகொடுத்து நிற்கிறார்கள். இப்படியாக இனவாதிகளையும், தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர்பீடங்களில் அமர்த்தி அவர்களது தயவில் தங்கிநிற்கும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க துணிவான முடிவுகளை எடுக்குமா என்பது சந்தேகமே.

போர்பற்றியும், சமாதானம் பற்றியும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன. பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களும் கடும்போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகிறது, மிகவும் குழப்பகரமாகப் பேசுகிறது. புலிகளுடன் பேசத்தயார் என ஒரு குரலும், புலிகளைப் பூண்டோடு அழிப்போம் என இன்னொரு குரலும், புலிகள் சரணடையும் வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதமமந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகார பீடங்களிலிருந்தே இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன. இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும் கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்றுவித்தை காட்ட, பிரதம மந்திரியும் இராணுவத் தளபதியும் உள்நாட்டு இனவாத சக்திகளுக்கு தீனிபோட்டு வருகின்றனர்.

மேற்குலக நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற்தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டுவருகிறார். சமாதானம் என்றும் பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப்பரவலாக்கம் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டு மேற்குலகின் கண்களுக்கு மண் தூவி வருகிறார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட கடும்போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகின்றோம். அவரது ஆறாண்டு கால அரசியல் வரலாறும், தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவ, பொருளாதார கொடுமைகளுக்கு ஆளாக்கி வரும் அவரது அணுகுமுறையும், சமீபத்திய அவரது போர்த் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப்பாட்டிற்குத் தள்ளியது. இராணுவச் செலவீனத்திற்கு ஒதுக்கப்படும் பெருந்தொகை நிதி, பாரிய அளவிலான ஆயுதக் கொள்வனவு, இடைவிடாது படைக்கு ஆட்சேர்ப்பு, விலகிய இராணுவத்தினரை விரட்டிப் பிடித்தல், இப்படியாக, இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தி போருக்குத் தயார்படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சந்திரிகா ஒரு இராணுவவாதக் கடும்போக்காளர் என்பது புலனாகும்.

இம்மாதம் ஒன்பதாம் திகதி, புதிய பாராளுமன்றத்தை திறந்துவைத்துப் பேசிய சந்திரிகா, தமிழரின் இனப்பிரச்சினை குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சந்திரிகாவின் குழப்பகரமான பார்வையும் அணுகுமுறையும் தெளிவாகும். இந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சினையின் தோற்றம்பற்றி விளக்கமுனையும் சந்திரிகா, கடந்த 50 ஆண்டு காலமாக தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார். ஆயினும் தமிழர் என்று குறிப்பிடாமல் ''சிறுபான்மை சமூகங்களுக்கு'' அநீதி இழைக்கப்பட்டதாகப் பொதுப்படையாகக் கூறுகிறார். ''இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, அதிகாரக் கட்டமைப்பில் பங்குகொள்வதற்கு சிறுபான்மை சமூகத்தினருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. அதுதான் இனப்பிரச்சினையின் தோற்றப்பாட்டிற்கு உண்மையான காரணம்'' என்று சந்திரிகா விளக்கம் அளிக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் மக்களுக்கு எதற்காக அநீதி இழைக்கப்பட்டது? யாரால் இழைக்கப்பட்டது? எப்படி, எந்த வடிவங்களில் இழைக்கப்பட்டது? என்ற கேள்விகளுக்கு சந்திரிகா



''மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை''

பதில் தரவில்லை. மாறாக, தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த அநீதிகள் அனைத்திற்கும் அந்நிய காலனித்துவம் மீது பழியைச் சுமத்தி விடுகிறார். சிறிலங்காவின் அரசியலமைப்புச் சட்டங்கள் காலனித்துவ அதிகாரக் கட்டமைப்பிலிருந்து உருவாக்கம் கொண்டவை என்றும், இவை எமது சமூகத்தில் நிலவும் புறநிலைகளுக்கு ஏற்புதாக அமையவில்லை என்றும், சிறுபான்மை சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்த அரசியலமைப்புச் சட்டங்களே காரணமாக இருப்பதாகவும் சந்திரிகா கூறுகிறார். சந்திரிகா அளிக்கும் இவ்விளக்கத்தில், தமிழருக்கு எதிரான சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் கொடூரமான ஒடுக்குமுறை வரலாறு மிகவும் சாணக்கியமான முறையில் மூடிமறைக்கப்படுகிறது. அத்தோடு இந்த இன ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் பெற்றோரது பங்கும் இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசியல் அமைப்பில் குறை காண்பதும், அந்த அரசியலமைப்பை அந்நிய காலனித்துவத்தோடு தொடர்புபடுத்துவதும் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் கேலிக்கூத்தான விடயம்.

அந்நிய காலனித்துவ தலையீடு காரணமாகவே தமிழீழ மக்கள் தமது வரலாற்றுத் தாயகம் மீதான இறையாண்மையை இழந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. ஆனால் தமிழினம் மீதான திட்டமிட்ட ஒடுக்குமுறையானது இலங்கைத்தீவு ஆங்கிலக் காலனித்துவத்திலிருந்து சுதந்திரமடைந்ததன் பின்னரே ஆரம்பமாகிறது. இந்த ஒடுக்குமுறைக்கு காரணகர்த்தாவாக விளங்குவது சிங்கள - பௌத்த இனவாதமாகும். பௌத்த மதத்தில் வேர் பாய்ச்சி, சிங்கள சமூகக்கட்டமைப்பில் விருட்சமாக வளர்ந்து நிற்கும் இப்பேரினவாதச் சித்தாந்தம், சிங்கள அரசியல் உலகையும் ஆழமாக ஊடுருவி நிற்கிறது. சிங்கள அரசியல்வாதிகளால் படைக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்களும் இந்த பேரினவாதச் சித்தாந்தத்தின் ஒரு வடிவம். ஆகவே தமிழருக்கு கொடுமை இழைத்து வருவது சிங்கள - பௌத்த இனவாதமே தவிர, சந்திரிகா கூறுவது போல, ஆங்கில காலனித்துவக் கருத்துலகம் அல்ல.

சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழர்கள் நிகழ்த்திய அரசியற் போராட்டங்கள் அமைதி வழியிலிருந்து ஆயுதப் போராக விரிவுபெற்று, இறுதியில் முழு அளவிலான போர்வடிவம் பெற்றிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, தமிழர் படையான விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் இப்போர் நிகழ்ந்துவருகிறது. தன்னாட்சி உரிமையுடைய மக்கள் சமூகம் என்ற ரீதியில் இன அழிப்பை நோக்காகக் கொண்ட அரச அடக்குமுறையிலிருந்து விடுதலைபெற ஆயுதமேந்திப் போராடும் உரிமை எமக்குண்டு. சர்வதேச மனிதவுரிமைச் சட்டங்களுக்கு இசைவான இந்த உரிமையின் அடிப்படையில்தான் தமிழீழப் போர் நடைபெற்றுவருகிறது. இதுதான் உண்மைநிலை. ஆனால் சிங்கள அரசு இந்தப் போர் பற்றிய உண்மைநிலையையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் உலகிற்கு இருட்டடிப்புச் செய்து வருகிறது. அதுமட்டுமன்றி தமிழரின் தேசவிடுதலைப் போரை 'பயங்கரவாதம்' என திரிபுபடுத்தி, இழிவுபடுத்தியும் வருகிறது.


→



www.eelamview.com

www.eelamview.com





... கொள்கைப் பிரகடன அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியிலான போர்பற்றி சந்திரிகா குறிப்பிடும்போது ''இனப்பிரச்சினையின் ஒரு விளைவுதான் இந்தப் போர்'' என்கிறார். ஆயினும் அதே அறிக்கையில் இப்போரை ''ஆயுதப் பயங்கரவாதம்'' என்றும் குறிப்பிடுகிறார். தமிழீழப் போரை இனப்பிரச்சினையின் வெளிப்பாடு என்று கூறும் அதே நாக்குத்தான் அதனைத் தமிழரின் ஆயுதப் பயங்கரவாதம் என்றும் வர்ணிக்கிறது. இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைப்போம் என்று கூறும் சந்திரிகா பயங்கரவாதத்தை போர் மூலம் ஒழிப்போம் என்றும் முழங்குகிறார். இப்படியாக சந்திரிகா அரசு தமிழரின் போர் பற்றிய உண்மைநிலையை திரித்து, மறுத்து, பயங்கரவாதம் எனப் பொய் சொல்லி, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது.

தமிழீழப் போரானது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுதலைப் போர் என்ற யதார்த்த அரசியல் உண்மையை சிங்கள அதிகார வர்க்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சினையை சிக்கலாக்கி வருகிறது. இதுதான் போரைத் தீவிரப்படுத்திவருவதற்கும் காரணமாக இருக்கிறது. இதுதான் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருந்துவருகிறது.

சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை, நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றத் தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் கிட்டப்படும் தீர்வானது நியாயமானதாக, நீதியானதாக, சமத்துவமானதாக, தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம். நோர்வே நாட்டு சமாதானக் குழுவினரை அண்மையில் வன்னியில் நான் சந்தித்தபோது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டை தெளிவாக, அழுத்தம் திருத்தமாக எடுத்துவிளக்கினேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும் இயல்புநிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக, பரஸ்பரம் பகைமையுடனும் சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இரு தரப்பினரும் சண்டையைத் தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல.

இதனால்தான் போர் நெருக்கடியை படிப்படியாகத் தளர்த்தி, போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில் நல்லெண்ணப்புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம்.

இயல்புநிலை என்னும் பொழுது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி, எமது மக்களின் வாழ்க்கைநிலை இயல்பான இருப்பிற்குத் திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகிறோம். ஒரு உறுதியான தளத்தில், உகந்த புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில், பேச்சுக்கள் நிகழும் பொழுதுதான் அவை ஆக்கபூர்வமானதாக அமையும் ஆகவேதான், பேச்சுக்கான நல்லெண்ண புறநிலையின் அவசியத்தையும் தேவையையும் நாம் வலியுறுத்துகின்றோமே தவிர பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இரு தரப்பிலிருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு சில யோசனைகளை தெரிவித்திருக்கிறது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலனை செய்து வருகிறோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச்சுமை குறைந்து, பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். அதற்கான முன்முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்லமுடிவுகளை எடுப்போம்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது தமிழ்மக்களுக்கு ஒரு புதிதான விடயமல்ல. தமிழ்மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்கு முந்திய தலைமைகளும் சிங்களத்துடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்களை நடத்தியுள்ளன. பண்டா - செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து பல தசாப்தங்களாக, பல வரலாற்றுச் சூழல்களில், பல்வேறு நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும் இப்பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கத் தவறிவிட்டன. இதனால் தமிழரின் பிரச்சினை மேலும் மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. இந்த துரதிஸ்ட நிலைமைக்கு பிரதான காரணம் தமிழரது பிரச்சினையின் அடிப்படைகளை, தமிழரது அரசியல் அபிலாசைகளை சிங்களதேசம் ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான்.

தமிழரின் பிரச்சினைக்கு சமாதான வழியில் நிரந்தரமான அரசியற்தீர்வு காணப்பட வேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்களதேசம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அத்தோடு தமிழ்மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தைக் கொண்டவர்கள். ஒரு தேசிய இனக்கட்டமைப்போடு, அந்த இனத்துவப் பிரக்ஞையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம், அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாக சொந்த நிலம் உண்டு. எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான், தமது சொந்த மண்ணில் நிம்மதியாக நிறைவாக வாழவேண்டும் என்பதுதான். மற்றவர்களின் அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியற் சூழலில் தம்மைத் தாமே ஆட்சி புரிந்து கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசையாகும். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அத்திவாரத்திலிருந்துதான் ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும்.

தமிழர் பிரச்சினையின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதிவழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்குச் சந்தேகமே.

தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் குமுறும் இனக்குரோத வெறியாட்டங்கள், ஆட்சியதிகாரத்தில் பேரினவாத சக்திகளின் மேலாண்மை, தொடர்ச்சியாக இராணுவமயப்படுத்தப்படும் சிங்கள சமூகம். மகாசங்கத்தினரின் தமிழ்விரோதப் போக்கு, அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுக் கொள்கை இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது தமிழரின் தேசியஇனப்பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக் குறியாகிறது. அத்தோடு சந்திரிகா அரசு மேற்கொள்ளும் சில குருட்டுத்தனமான அணுகுமுறைகளும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முட்டுக்கட்டையாகவும் அமைந்துவிடுகிறது. பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி முந்திய இந்திய அரசு இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறு போல சந்திரிகா அரசும் தமிழ் விரோதக் குழு ஒன்றை வடகிழக்கில் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறது. இப்படியான நடவடிக்கைகள் மூலம், இந்த அரசாங்கம், தமிழ் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வதுடன் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிடுகிறது.

எனது அன்பான மக்களே,

எமது தேசியப் பிரச்சினை இப்பொழுது உலக நாடுகளின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்துவருகிறது இப்பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்படவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகிறது. உலக மனச்சாட்சியின் பார்வை எம்பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்குத் தெரிகிறது

நாம் சமாதானப் பேச்சுக்கோ அல்லது சமாதான வழியான அரசியற்தீர்விற்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகிற்கு உணர்த்திவருகிறோம். சமாதானப் பேச்சுக்கு உகந்ததாக சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும், தமிழர்களது அடிப்படைக்கோரிக்கைகளையும் உலக சமூகம் புரிந்து வருகிறது. தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையின் பின்னணியிலுள்ள சக்திகள் யாரென்பதையும் உலகம் இனங்கண்டு வருகிறது.

உலக நாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவியையும் ஆயுத உதவியையும் ஆதாரமாகக் கொண்டே சிங்கள அரசு தமிழருக்கு எதிராக இந்தப் போரை நடத்திவருகிறது. பெரியதொரு அழிவுப் போரை நடத்திக்கொண்டு, பெருமளவில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்துக் கொண்டு சமாதானத்திற்காகவே சண்டையை நடத்துவதாக சந்திரிகா அரசு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறது. ஆயினும் சந்திரிகா அரசு நடத்தும் இப்போரின் நோக்கம் என்ன என்பதையும் இப்போரினால் புலிகளை வெற்றிகொள்ளவோ அன்றி தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கவோ முடியாது என்பதையும் மேற்குலகம் இப்பொழுது உணரத்தொடங்கியுள்ளது. எனவே சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்பவேண்டுமென்றால், சிங்களத்திற்கு பொருளாதாரத் தீனிபோட்டுவரும் உலக நாடுகளிடம்தான் அந்தக் கடிவாளம் இருக்கிறது.

தென்னிலங்கை சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்து வரும் சிங்கள-பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களை காருண்யத்துடன் அரவணைத்துக் கொள்ளுமென நாம் நம்பவில்லை சிங்கள தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக்கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்கள், சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள், அந்த தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

## தீமூட்டும் கனவு

படுக்கைமேடுகள் உயிர்த்து
முளைவிடுகின்றன தீக்கொழுந்துகள்.
காற்றிலாடி
மனங்களைத் தொற்றி
பற்றி யெரிகின்றது
படுக்கைமேடுகளில் பள்ளிகொள்ளும் பாதிக்கனவு:
எரிந் தெரிந்து
கொழுந்துகள் துயின்ற பின்னும்
திமூண்ட மனங்களில்
நீறாகாமலே நின்றெரிகிறது மீதிக்கனவு.

எஸ். உமாஜிப்ரான்

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com